# களனி

4

"வெற்றுக் கோஷங்கள் விண்ணைதிர முழங்கட்டும்
வெறுங்கை வீரர்கள் வேதாந்தம் பேசட்டும்
தட்டியெழுப்பி எம்சக்தி தலைநிமிர வைப்பதற்கு
கட்டியெழுப்பு நீ கடல்போன்ற மானிடத்தை"

கலை — இலக்கியம் — அறிவு

1975

FOR

ANYTHING

IN

COMMERCIAL ARTISTIC

OR

MULTI-COLOUR PRINTING

CONTACT

*The Navalan Pathippakam*

NALLUR

JAFFNA

★ ★ ★

எவ்விதமான

அச்சு வேலைகளானாலும்

சிறந்த முறையில்

குறுகிய காலத்தில்

கண்கவர் வர்ணங்களில்

பதிப்பதற்கு

**நாவலன் பதிப்பகம்**

நல்லூர்

யாழ்ப்பாணம்

விவசாயிகளுக்குத் தேவையான

★ உரக்கலவைகள்

இருமிநாசினி வகைகள்

★ தெளி கருவி

என்பனவற்றுக்கு தொடர்பு கொள்ளுங்கள் :

↓

# நாதன் ஸ்ரோர்ஸ்

விசுவமடு : பரந்தன்

---

உங்கள் தேவைகளுக்குரிய :

- ★ பலசரக்கு வகைகள்
- ★ சாய்ப்புச் சாமான்கள்
- ★ அலுமினியப் பொருட்கள்
- ★ பால்மா வகைகள்
- ★ மருந்துச் சரக்கு வகைகள்
- ★ களைகொல்லி, இருமிநாசினி

முதலியனவற்றிற்கும்


கோயில், திருமண வைபவங்களுக்கான சிறந்த ஒலி, ஒளி தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள் ;

# நியூ இந்திரா ஸ்ரோர்ஸ்

கரடிப்போக்கு,

கிளிநொச்சி.

உரிமை: த. தங்கராசா




உங்கள் மோட்டார் வாகனங்களின்
பற்றறிகளைச் சீராகப் பராமரிக்க

## 'துரை அன் கோ'விற்கு

விஜயம் செய்யுங்கள்.
பற்றறி பழுதுபார்ப்பு
பராமரிப்பு
ஆகியவற்றில் பல வருட
அனுபவம் பெற்றவர்கள்.

உங்களது தள்ளாத வயதிலும் கூட வாகனத்தை தள்ள வைக்காதது

☆ 'டெகனைற்' பற்றறி ஒன்றே ★

விபரங்களுக்கு :

**துரை அன் கோ.**
23/3 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை :
கண்டி வீதி,
பரந்தன்.

# றேடியோ மனவல்

வடமாகாணத்தில்

## பல வருட அனுபவமுள்ளவர்கள்
## பிரபல்யமானவர்கள்

★ றேடியோ ★ அம்பிளிபயர் ★ ரேப்றெக்காட்டர்
பழுது பார்த்தல் புரைமைப்புச் செய்தல்
★ டயபிரும் ★ ஸ்பீக்கர் ★ ரூன்ஸ்வோமர்
வையின்றிங் செய்தல்
★ வைபிறேற்றர்
சீர்படுத்தல்

**இதில் எது செய்யவேண்டும்?**
எம்மைக் கலந்தாலோசியுங்கள்

## றேடியோ மனவல்

23/4, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாண

# களனி

நூறு சிந்தனை மலரட்டும்
நாறும் கீழ்மைகள் தகரட்டும்

நதி — 1 ★ தை — பங்குனி 1975 ★ கிளை — 4


# மாணவர்களும் தரப்படுத்தலும்

பல்கலைக் கழகத் தேர்வுப் பரீட்சையில் சென்ற வருடம் 15,500 பேர் தேர்ச்சி பெற்றுள்ள போதிலும் கோட்டா முறையில் புள்ளிகளைத் தரப்படுத்தியதன் காரணமாக 3, 500 பேர்களுக்கு மட்டுமே அனுமதி கிடைத்துள்ளது. இதனால் மிகுதியாகவுள்ள மாணவர்கள் ஆத்திரமடைந்துள்ளனர். எதிர்காலத்தில் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை எதிர்நோக்கியிருக்கும் மாணவர்களும் இதனால் விரக்தியடைந்துள்ளனர். கடந்த காலங்களில் அதிக கல்வி வசதிகள் காரணமாக பெருமளவில் பல்கலைக் கழகம் செல்லும் வாய்ப்பைப் பெற்றிருந்த யாழ்ப்பாணக் குடாநாட்டு மாணவர்கள் இதனால் கூடுதலான அளவு பாதிக்கப்பட்டுள்ளது உண்மையே. வடபகுதியிலுள்ள பிரிவினைச் சக்திகள் இச்சந்தர்ப்பத்தைத் தமது தீய முயற்சிகளுக்குப் பாவிக்கும் வேலையில் இறங்கியுள்ளனர். தமிழ் மாணவர்களுக்கு கூடுதலான அளவு பல்கலைக்கழக அனுமதி வழங்க வேண்டும் என அவர்கள் கோருகின்றனர். தரப்படுத்தல் முறையினால் பெருந்தொகையான சிங்கள மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற உண்மையை இருட்டிப்புச் செய்து தமிழ் மாணவர்களுக்கு மட்டுமே இந்த அநீதி நடந்துள்ளது என அவர்கள்


"களனி"
சுப்பிரமணியம் கட்டிடம்,
கண்டி வீதி,
கிளிநொச்சி

**சந்தா விபரம் :**

ஒரு வருடம்

| | |
|---|---|
| தபாற் செலவுடன் | 4 ரூபா 50 சதம் |
| தனிப் பிரதி | 1 ரூபா |



கதை, கவிதைகளில் காணப்படும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. கட்டுரைகளின் கருத்துக்களுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பாளர்.

கூக்குரலிடுகின்றனர். இச் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டு மாணவர்களும் நாட்டிலுள்ள ஏனைய மாணவர்களும் இப்பிரச்சினை சம்பந்தமான விஷயங்களை ஆராய்வது அவசியமாகும்.

தமிழ் மாணவர்களுக்கு கூடுதலான அளவு அனுமதியை, வழங்குவதன் மூலமோ அல்லது இன்னும் ஏராளமான பல்கலைக்கழக வளாகங்களைக் கட்டி எல்லோருக்கும் அனுமதி வழங்குவதன் மூலமோ இப்பிரச்சினை அடிப்படையில் தீர்ந்து விடுமா? கல்வி கற்பது மாணவர்களின் குற்றமல்ல. முதலாளித்துவ, சமூக அமைப்பு திட்டமிடாத கல்வியமைப்பின் மூலம் இலட்சக்கணக்கான மாணவர்களை வேலையற்ற வாலிபர்களாக உற்பத்தி செய்து கொண்டே இருக்கிறது. இது இலங்கையில் மாத்திரமின்றி எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் நடைபெறுகின்றது. எமது நாட்டைப் பொறுத்தவரை, பிரித்தானிய காலனியாதிக்க வாதிகள் தமது கொள்ளைச் சுரண்டலை நடாத்துவதற்கு ஏற்ற பொருளாதார அமைப்பையும் கல்வி அமைப்பையும் இங்கு ஏற்படுத்தியுள்ளனர். அதன் மூலம் சிந்தனரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும், ஏகதிபத்திய வாதிகளுக்குச் சேவை செய்யும் காற்சட்டைக் கூட்டத்தை உருவாக்குவதே அவர்கள் நோக்கம். இத்தகைய கல்விமான்கள் தேசப்பற்று அற்றவர்களாகவும், நாட்டின் உற்பத்தி, முன்னேற்றம் என்பவற்றில் தொடர்பில்லாதவர்களாகவும் இருக்கின்றனர். தேசிய இனங்கள் மத்தியில் எழுச்சி ஏற்பட்டு சிறிது மாற்றம் ஏற்பட்டாலும் கூட அடிப்படை நிலைமையில் மாற்றம் ஏற்படவில்லை. ஏகாதிபத்திய வாதிகளின நேரடி ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட போதும், பொருளாதார பிடிப்புகள் மூலம் புதிய முறையிலான காலனித்துவக் கொள்கையை இலங்கைமீது அமுல்படுத்துகின்றனர். உள்நாட்டில் நிலப்பிரபுத்துவத்தின் மிச்ச சொச்சப் பிடிகள் உள்ளன. எனவே நாடு இந்தத் தளைகளிலிருந்து விடுபட்டு முழுமையான விடுதலையைப் பெற்று, சுதந்திரமான, சமத்துவமான பொருளாதார அமைப்பை நிறுவும்போதுதான் அதற்கேற்ற முறையில் பயனுள்ள கல்வி அமைப்பையும் பெறமுடியும். அத்தகைய கல்வி அமைப்பு பாடசாலைகளையும், பல்கலைக்கழகங்களையும் வேலையில்லாத வாலிபர்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளாக மாற்றமாட்டாது. அங்கு தொழிற்சாலைகளும், விளை நிலங்களுமே கல்வி கற்கும் பிரதான தளங்களாகும். அத்தகைய சமூகத்தில் மாணவர்களுக்கு மாத்திரமின்றி நாட்டின் பிரதான இயக்கு சக்திகளான தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் விஞ்ஞான பூர்வமான கல்வியைப் பெறும் வாய்ப்பு ஏற்படும். சிறுபான்மைத் தேசிய இனங்களின் கல்வி, கலாச்சாரம் என்பனவற்றை மேம்படுத்துவதற்காக விசேஷ கவனம் செலுத்தப்படும். இத்தகைய நிலைமை இன்று சோஷலிச நாடுகளில் மட்டுமே காணப்படுகின்றது.

எனவே தரப்படுத்தல் முறையினால் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குஉடனடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என நாம் அரசாங்கததை வன்மையாகக் கோரும் அதேவேளையில், உடனடி நடவடிக்கைகள் அரைகுறையான தற்காலிகத் தீர்வுகளாகவே இருக்க முடியும் என்பதையும் மாணவர்களுக்கு சொல்லிவைக்க விரும்புகின்றோம் எனவே மாணவர்கள் — குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டு மாணவர்கள் பாஸிசவாதிகள் பிரிவினை வாதிகள் போன்ற தீய சக்திகளின் சீனிபூசிய தோட்டாக்களுக்கு தம்மைப் பலியாக்காமல் பார்த்துக் கொள்வதுடன், தற்காலிகத் தீர்வுகளுக்கு மட்டும் போராடாது அடிப்படையான, நிரந்தரமான தீர்வுக்காகப் போராட வேண்டும். குறிப்பாகத் தமிழ் மாணவர்கள் நாட்டின் ஏனைய சிங்கள, முஸ்லீம் மாணவர்களுடன் ஐக்கியப்படுவதுடன், பொதுவாக மாணவர்கள் நாட்டின் பெரும்பான்மையினரான தொழிலாளர்களுடனும் விவசாயிகளுடனும் ஒன்றிணைந்து போராடவேண்டும். இதற்கு அவர்கள் முதலாளித்துவ கல்விக் கூடங்களில் போதிக்கப்படும் மலட்டுக் கல்வியுடன் மட்டும் நின்றுவிடாது, சமூக மாற்றத்துக்கான கல்வியையும் கற்றுத் தெளியவேண்டும். இது ஒன்றே இருண்டு கிடக்கும் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும்.

* * *

# சிக்கிம்:

## மீண்டும் ஒரு உதாரணம்

இந்தியப் பிற்போக்கு அரசாங்கம் இமாலயப் பிரதேச நாடான சிக்கிமை சட்ட விரோதமாக தன்னுடன் இணைத்துக் கொண்டதன் மூலம் மீண்டுமொரு முறை தனது தேச விஸ்தரிப்புக் கொள்கையை உலகின் முன் நிரூபித்துள்ளது. நீண்ட காலமாகவே சிக்கிமை தனது ''பாதுகாப்பு பிரதேசமாக'' வைத்திருந்த இந்தியப் பிற்போக்கு அரசாங்கம், இப்பொழுது சட்டவிரோதமான முறையில், சிக்கிம் மக்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் அந்த நாட்டை தன்னுடன் இணைத்துக்கொண்டுள்ளது. சமாதானம், சுதந்திரம், சமத்துவமான நட்புறவு என்ற வார்த்தைகளை உதட்டில் உச்சரித்துக்கொண்டே இந்திய விஸ்தரிப்புவாதிகள் தமது ஆக்கிரமிப்புக் கொள்கைகளை முன் தள்ளுவதில் இது ஒரு உதாரணமாகும். இந்தியப் பிற்போக்குவாதிகள் இனிமேலும் உலகமக்களை ஏமாற்ற முடியாது.

சோவியத் சமூக ஏகாதிபத்தியவாதிகளுடன் செய்துகொண்ட ''பாதுகாப்பு ஒப்பந்தத்தைப்'' பரீட்சிப்பதற்கு முதலில் பாகிஸ்தானை இந்திய விஸ்தரிப்புவாதிகள் இருகூறுக்கினர். பாகிஸ்தான் இருகூறுக்கப்பட்டு பங்களாதேஷ் உருவாக்கப்பட்ட பின்னர், பாகிஸ்தான் பிரதமர் சுல்பிகார் அலிபூட்டோ கூறிய வார்த்தைகள் இங்கு நினைவுக்குரியன. ''இந்திய ஆக்கிரமிப்பாளர்களினால் இன்று பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட கதி இன்னும் சில காலத்திற்குள் நேபாளம், ஆப்கானிஸ்தான், சிக்கிம், பூட்டான், இலங்கை, பர்மா, ஈரான்போன்ற நாடுகளுக்கும் ஏற்படும்'' என்று அப்பொழுது பாகிஸ்தான் பிரதமர் கூறினார். இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் நடவடிக்கைகளுக்கு பலியான நாட்டின் தலைவர் என்ற ரீதியில் அன்று பாகிஸ்தான் பிரதமர் கூறிய வார்த்தைகள் இன்று எவ்வளவு உண்மையாகிவிட்டன. பாகிஸ்தானில் ருசி கண்ட இந்திய அரசு, அடுத்ததாக தனது மேல்நிலை வல்லரசு நண்பனுடன் சேர்ந்து ஆப்கானிஸ்தானில் அரண்மனைச் சதி ஒன்றை நடாத்தி ஆட்சியைக் கவிழ்த்தனர். அதன்மூலம் ஆப்கானிஸ்தானைப் பயன்படுத்தி பாகிஸ்தான் மாகாணமான பலுஸ்சிஸ்தானில் மீண்டுமொரு பிரிவினை இயக்கத்தை உருவாக்கினர். அடுத்ததாக சிக்கிமில் தமது கைவரிசையைக்காட்டியுள்ளனர். இந்தியாவின் அடுத்த களம் எதுவாக இருக்கும் என்பதில் அதிக சிந்தனைக்கு இடமில்லை.

ஆனால் இந்தியப் பிற்போக்கு வாதிகளும் அவர்களுடைய நெருங்கிய சகபாடியான சோவியத் சமூக ஏகாதிபத்தியமும் தென் ஆசிய மக்களினதும், முழு உலக மக்களினதும் கோபாவேசத்திலிருந்து ஒருபோதுமே தப்பமுடியாது. அதன் அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துவிட்டன. இந்தியாவின் 'பெருந்தன்மையினால்' உருவாக்கப்பட்ட பங்களாதேஷ் அரசாங்கத்திற்கும் இந்திய அரசிற்குமிடையில் பெரும் முரண்பாடுகள்தோன்றிவளர ஆரம்பித்துவிட்டன. கடல், தரை மார்க்க எல்லைகள், உலகச் சந்தையில் சணல் வர்த்தகம், பொருளாதார, தொழில்நுட்பஉதவி, வர்த்தகம், நீர்ப்பங்கீடுபோன்ற விஷயங்களில் இரு அரசாங்கங்களுக்குமிடையில் பெரும் முரண்பாடுகள் தோன்றியுள்ளன. மறுபக்கத்தில் இந்தியர்களின் சுரண்டலும்சூறையாடலும் பங்காளதேஷ் மக்களை கோபாவேஷம் கொள்ள வைத்துள்ளது. ஆத்திரம்கொண்ட மக்கள் பங்களாதேஷில் உள்ள இந்திய நிறுவனங்களை வெடிவைத்துத் தகர்த்தவண்ணமுள்ளனர். முன்னாள் இந்திய ஜனாதிபதி வி. வி. கிரி பங்காள தேஷ் விஜயம் மேற்கொண்டபோது, மக்களின் ஆத்திர உணர்வுகள் கடல்போல் கொந்தளித்ததினால் அவரது பல நிகழ்ச்சிகளை ரத்துச்செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

நேபாளத்திலும், ஆப்கானிஸ்தானிலும் இந்திய விஸ்தரிப்புவாதத்திற்கு எதிரான

மக்களின் போராட்டங்கள் நாளுக்குநாள் வளர்ந்த வண்ணம் உள்ளன. சிக்கிமிலோ நிலைமை உச்சத்தை அடைந்துள்ளது. இந்திய விஸ்தரிப்புவாதிகள் எதிர்பாராத அளவுக்கு. அவர்களுக்கு அதிர்ச்சியூட்டும் வகையில் சிக்கிம் மக்கள் தமது போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இந்திய றிசேர்வ் படை படுகொலை செய்தும், அடித்து நொருக்கியும், சிறைக்குள் தள்ளியும் படுவதை செய்தபோதிலும் கூட, தேசபக்தியுள்ள சிக்கிம் மக்கள் தேசிய சுதந்திரத்துக்கான தமது புனிதமான, வீர மிக்க போராட்டத்தை உறுதியுடன் முன்னெடுத்துச் செல்கின்றனர். சிக்கிம் மன்னர் சோக்யால் இந்தியாவின் நடவடிக்கையை வன்மையாக எதிர்க்கின்றார். இப்போராட்டங்களில் சிக்கிம் மாணவர்கள் முன்னணிப் பாத்திரம் வகித்துச் செயல்படுகின்றனர். இதன் காரணமாக சிக்கிம் மாணவர் இயக்கத்தின் தலைவரை இந்திய அரசாங்கம் சிறையில் தள்ளியுள்ளது. உலகிலுள்ள நீதியை விரும்பும், விடுதலையை விரும்பும் சகல மக்களும் சிக்கிம் மக்களுக்கு தமது ஆதரவைப் பிரகடனம் செய்துள்ளனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியாவின் நாலா திசைகளிலும் கோடிக் கணக்கில் பரந்திருக்கும் சகல உழைப்பாளி மக்களும், நீதியை விரும்பும் மக்களும், சகல தேசிய இனங்களும் இந்தியப் பிற்போக்கு அரசாங்கத்தின் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.

நாம் இந்திய விஸ்தரிப்புவாதத்தின் 'கதிர்வீச்சுக்குள்' அமைந்திருக்கும் சின்னஞ் சிறிய தேசத்தைச் சேர்ந்தவர்களாவோம். நாம் எமது அண்டை நாடுகளின் கசப்பான அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்டு நீதியையும், சுதந்திரத்தையும் விரும்பும் இந்திய மக்களுடனும், தென் ஆசிய மக்களுடனும், முழு உலக மக்களுடனும் ஒன்றிணைந்து, சோவியத் சமூக ஏகாதிபத்தியம், இந்திய விஸ்தரிப்புவாதம், சகல விதமான ஏகாதிபத்தியங்கள், பிற்போக்குச் சக்திகள் என்பனவற்றை குழி தோண்டிப் புதைக்கும் நன்னாளுக்காக எமது சகல வேலைகளையும் தீவிரப்படுத்துவோமாக.

★ ★ ★

"நீதியான இலட்சியம் அமோக ஆதரவைப் பெறும்; அநீதியான இலட்சியம் அற்ப ஆதரவைப் பெறும் என்பதை எண்ணற்ற உண்மைகள் நிரூபிக்கின்றன. பலவீனமான நாடு பலமான நாட்டைத் தோற்கடிக்க முடியும்; சிறிய நாடு பெரிய நாட்டைத் தோற்கடிக்க முடியும். சிறிய நாடு ஒன்றின் மக்கள், போராட்டத்தில் எழவும் ஆயுதமேந்தவும் துணிந்து, தமது சொந்த நாட்டின் தலைவிதியைத் தம் கரங்களில் பற்றிக்கொண்டால், அவர்கள் பெரிய நாடு ஒன்றின் ஆக்கிரமிப்பை நிச்சயம் தோற்கடிக்க முடியும். இது ஒரு வரலாற்று விதி."

★ ★ ★

# பேத்திக் கல்யாணம்

— கிருபா —

அலமேலு ஆச்சி தன் வயதையும் மறந்து பர, பர வென்று சுழன்றாள். அவள் கைகள் அப்பம் சுடுவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. எப்படியோ இன்று ஐம்பது அப்பம் விற்றுவிட்டால் அவளின் கணக்குப்படி 2 ரூபா 50 சதம் கிடைக்கும். அதை அப்படியே தான் சேமித்துக் கொண்டிருக்கும் பணத்துடன் போட்டுவிட்டால் நூறை எட்டிப் பிடித்துவிடும். இன்னும் ஒரு மாதம் சற்று சிரமப்பட்டால் எப்படியோ இருநூறு ரூபாய் சம்பாதித்து சிக்கனமாக தன் ஒரே பேத்தியின் கல்யாணத்தை முடித்துவிடலாம் என்று அவள் மனம் எண்ணிக் கொண்டிருந்தது. அடேயப்பா அவள்தான் எப்படி வளர்ந்துவிட்டாள். வயதும் ஏறிக்கொண்டே போகிறது. அக்கம் பக்கத்தவர் நாலு வார்த்தை கூறுமுன், தான் கண்ணை மூடுமுன் அவளை ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுத்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் கிழவி பத்து வீடுகளுக்குப் பற்றுத் தேய்த்துக் கொடுப்பதுடன் இப்படி ஒரு தொழிலையும் தன் தள்ளாத வயதில் ஏற்படுத்திக் கொண்டாள். பேத்திக்கு ஒருவன் வந்து வாய்த்துவிட்டால் பிறகு நிம்மதியாகக் கண்ணை மூடிவிடலாம் என்று அவள் அடிக்கடி நினைத்துக்கொள்வாள். எப்படியோ வாயைக்கட்டி வயிற்றைக் கட்டி நூறு ரூபாய் சம்பாதித்து விட்டாள். அதிலேயே அரை உயிர் போய்விட்டது. அவளிடமிருந்த ஒரேயொரு சீலையும் நைந்து தொட்டால் உதிர்ந்து விடுவோமோ என்பது போலிருந்தது. அதைப்பற்றியெல்லாம் நினைக்க கிழவிக்குப் பொழுதில்லை. அடிக்கடி வாயில் குதப்பிக்கொள்ளும் வெற்றிலையைக் கூட தியாகம் செய்துவிட்டாள். எப்போதாவது ஒருநாள் தான் போகும் வீடுகளில் விட்டெறியும் வதங்கிய இலையை வாயில் அடக்கிக் கொள்வாள். வர, வர அவளின் வேலையிலும் தள்ளாமை எதிரொலித்தது. பத்து வீடுகளுக்குப் பற்றுத் தேய்ப்பதென்றால் சும்மாவா? அத்துடன் விடுவார்களா? அங்கே போ, இங்கே போ, அதை வாங்கி வா இதை வாங்கி வா என்று உயிரை எடுத்து விடுவார்கள். ஏதும் முடியாதென்றால் சீட்டு கிழிந்துவிடுமோ என்ற பயத்தில் கிழவி எல்லாவற்றுக்கும் வளைந்து கொடுத்தாள். இவ்வளவுக்கும் தன் பேத்தியை வெளியில் அனுப்பி வேலை வாங்க அவள் மனம் ஒப்புக்கொள்ளவில்லை. வயது வந்த பெண் அப்படியெல்லாம் அனுப்பினால் நாளை கட்டிக்கப் போறவன் ஏதாவது சொல்லிவிட்டால் என்ற பயம் கிழவிக்கு. எந்த வீட்டிலும் ஒரு நாளாவது அவள் தங்கியதில்லை. பேத்தி தனியாக இருப்பாளே என்ற பயம். தன் வயிற்றைக் கட்டியாவது தன் பேத்தி வயிற்றை நிரப்பி விடுவாள்.

எப்படியோ நூற்றி ஐம்பது ரூபாய் சம்பாதித்த போதுதான் அந்த சம்பவம் நடந்தது. அன்றும் கிழவி அரக்கப் பரக்க அப்பம் சுட்டுக் கொண்டிருந்தாள். அவளின் பேத்தி அவளருகில் அமர்ந்து அவளுக்கு உதவி செய்து கொண்டிருந்தாள். இன்னும் பத்து அப்பங்கள் முடிந்ததும் அதில் முப்பது அருகிலுள்ள தேத்தண்ணிக் கடைக்கும், மிகுதி அன்றாடம் கூலிக்கு சாப்பிடுபவர்களுக்கும் கொடுத்தாக வேண்டும். பரபரப்புடன் தன் வேலையில் கவனமாயிருந்த கிழவியினருகிலிருந்த அப்பங்களை யாரோ ஒருவரின் கால் உதைத்துத் தள்ளிய பின்புதான் கிழவி தன் அருகில் மிடுக்காய் நின்ற இருவரைக் கவனித்தாள். மண்ணோடு மண்ணாய்க் கிடந்த அவளின் அப்பங்களை நோக்கியதும் வாடி உலர்ந்த அக்கண்களில் கண்ணீர் கசிய ஆரம்பித்தது. ''ஏய் கிழவி ஊரில் காலரா பரவுது. இப்படியெல்லாம் அப்பம் சுட்டு விற்கக்கூடாதென உனக்கு எத்தனை தரம் சொல்வது. சரி, சரி வெளியே நட. சொல்ல வேண்டிய இடத்தில் உன் கதைகளை அளந்துகொள்" என்று உத்தியோக மிடுக்கில் கூறிய ஒருவர் கிழவியைத் தள்ள, மற்றவர் ஏதோ தன் தகுதிக்கு ஒவ்வாத இடத்தில்

நுழைந்து விட்டவர்போல அக்குடிசைக்குள் சிரமப்பட்டுக் கொண்டும், அடிக்கடி தன் அழகிய கைக்குட்டையால் மூக்கைப் பிடிப்பதுமாயிருந்தார். கிழவி கெஞ்சினாள், அழுதாள் ஊகூம் வந்திருந்தவர்கள் தன் கடமையிலேயே கண்ணாக இருந்தார்கள். கிழவிக்கு பளிச்சென்று ஒரு யோசனை வந்தது. ஆனால் அதை செயலாற்ற பாழும் மனம் இடந்தரவில்லை. பக்கத்தில் பரிதாபமாக நின்ற பேத்தியைக் கண்டதும் இனி தாமதிப்பதில் பயனில்லை என்ற எண்ணத்தில் தன் சேமிப்பான நூற்றைம்பது ரூபாயை, அழுக்குப் படிந்து; நிறம் தெரியாமல் மங்கிப்போன சுருக்குப் பையிலிருந்து வெளியே எடுத்தாள். ரூபாய்த் தாள்களைக் கண்டதும் வந்திருந்தவர்களின் சுருதி மெல்லவாக இறங்கத் தொடங்கியது. இப்போது அவர்களுக்கு குடிசையின் நாற்றம் தெரியவில்லை. அதே அழகுக் கைக் குட்டையால் கசங்கி அழுக்குப்! பிடித்த அந்த ரூபாய் நோட்டுக்களை அவர் சுற்றிக் கொண்டார். அன்று படுத்தவள்தான் கிழவி. அதன்பிறகு அவளால் எழும்ப முடியவில்லை' இப்போது கிழவி படுத்திருக்க பேத்தி வேலைக்குப் போகிறாள். அன்றாடம் அரை வயிற்றையே நிரப்ப முடியாத பணத்தில் மிகுதி ஏது? பேத்தியின் கல்யாணம் ...? அது காலம் வரும்போது நடக்கும் இப்படித்தான் கிழவி அரற்றிக்கொள்கிறாள்:

* * *

## தேசபக்தர்களைச் சுடு

துப்பாக்கியால் சுடுமாறு இடப்படும் உத்தரவுக்கு கீழ்ப்படிய மறுக்கும் ஒரு சிப்பாய் தான் எடுத்துக்கொண்ட உறுதி மொழியை மீறுகிறான் என்பதோடு தன்னை கிரிமினல் குற்றத்திற்கும் உட்படுத்திக் கொள்கிறான். அதிகாரிகளையும், சிப்பாய்களையும் கீழ்ப்படியுமாறு நான் கேட்டுக்கொள்ள முடியாது. ஏனென்றால் நான் அதிகாரத்தில் இருக்கும்போது எல்லா வகையிலும் இதேமாதிரி இதே சிப்பாய்களையும், இதே அதிகாரிகளையும் தான் பயன்படுத்த வேண்டியிருக்கும். நான் இவர்களுக்கு கீழ்ப்படிய மறுக்குமாறு இப்போது சொல்லிக் கொடுப்பேனேயானால், நான் அதிகாரத்திலிருக்கும்போதும் அவர்கள் அவ்வாறு செய்து விடுவார்களோ என்று நான் அஞ்சுகிறேன்.

—காந்தி.

(La Monde Feb. 20 1932)

(சுதந்திரப் போராட்ட வீரர்களை துப்பாக்கியால் சுட மறுத்து, கார்வாலி சிப்பாய்கள் ஆர்ப்பாட்டக்காரர்களோடு சேர்ந்து கொண்டபோது காந்தி அவர்களைக் கண்டித்து எழுதிய வாசகங்கள்;

# இந்திரா ஜனநாயகம்

சோவியத், அமெரிக்க ஏகாதிபத்தியங்களாலும், பெரும் நிலப்பிரபுக்கள், முதலாளிகள், அதிகாரவர்க்கம் என்பவர்களாலும் இயக்கப்படும் இந்திய அரசாங்கம், ஆசியாவில் ஒரு பொலிஸ்காரனைப் போல் நடந்துகொள்ள முயற்சிப்பது அனைவரும் அறிந்த உண்மை. தன்நாட்டுச் சமூக அமைப்புமுறை நாற்றமெடுப்பதை மறைப்பதற்காக அயலநாடுகளில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கப் போவது இந்திராகாந்தி அரசின் இலக்கணமாகிவிட்டது. இத்தகைய மாண்புடைய இந்திராவின் அரசைப்பற்றி லண்டனிலுள்ள (சர்வதேச மன்னிப்பு) மனித உரிமை ஸ்தாபனம் விடுத்துள்ள அறிக்கையைக் கீழே தருகின்றோம்:

"நக்ஸலைட்" புரட்சிக்காரர்கள் என்ற பெயரால் இந்தியா, 15,000 முதல் 20,000 பேர்களை இடவசதியற்ற முறையில் விசாரணையின்றிக் காவலில் வைத்திருக்கின்றது. ஆயுதப் புரட்சியைத்தூண்டும் இந்திய மார்க்ஸிஸ்ட் — லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளர்கள் "நக்ஸலைட்"டுகள் என்று அழைக்கப்படுகின்றார்கள். கடந்த மூன்று வருடங்களாக இவர்கள் பல சித்திரவதைகளுக் குட்படுத்தப்பட்டிருப்பதாக கல்கத்தாவிலுள்ள வழக்கறிஞர் வட்டாரங்கள் மனித உரிமை ஸ்தாபனத்துக்கு பல தடவை அறிவித்துள்ளது. விசேஷ பொலிஸ் காரியாலயத்திலும், லால்பஸார் பொலிஸ் நிலையத்திலும் பொலிசார் விசாரணை நடத்தும்போது கைதிகள் அடிக்கடி சித்திரவதை செய்யப்படுகின்றார்கள்.

மேற்கு வங்காளத்திலும் பிகாரிலும் சில கைதிகள் இரண்டு ஆண்டுகள் வரை சங்கிலிகளினால் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். அவயவங்கள் முறியும்வரை அடிக்கப்படுகிறார்கள். தலைகீழாக தொங்கவிடப்படுகிறார்கள். கைதிகளின் நகங்களில் குண்டுசிகளும், ஆணிகளும் செலுத்தப்படுகின்றன. மர்மஸ்தானங்கள் உட்பட உடம்பிலுள்ள உணர்ச்சிமிக்க எல்லாப் பாகங்களிலும் குண்டுசிகளும் ஆணிகளும் செலுத்தப்படுகின்றன. 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 1972 ஜூன் மாதம் வரை மேற்கு வங்காளத்திலும், பீகாரிலும் இடம் பெற்ற 12 சிறைச் சம்பவங்களில் 88 கைதிகள் கொல்லப்பட்டுள்ளனர். தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்படுபவர்கள், மீண்டும் இதர குற்றச்சாட்டுகளின் பேரில் அடிக்கடி கைது செய்யப்படுகின்றார்கள். இது சம்பந்தமாகப் பாரபட்சமற்ற விசாரணை நடத்துவதைச் சர்வதேச மனித உரிமை மன்னிப்புக் கமிஷன் வரவேற்கும்.

இந்த அறிக்கை இந்தியப் பிரதமர் இந்திராகாந்திக்கு கடந்த ஜூன் மாதம் அனுப்பி வைத்ததாகவும் அவரிடம் இருந்து எந்தவிதமான பதிலும் இதுவரை கிடைக்கவில்லையென்றும கமிஷனின் பொதுச் செயலாளர் கூறியுள்ளார்.

## தமிழ் தலைவரும் தமிழ் தொழிலாளர்களும்

ரோசாலை மாவட்டத்திலுள்ள சென். எலியாஸ் தோட்டத்திலிருந்து இந்தியா போகின்றவர்கள் உரிய நேரத்தில் பென்சன் கிடைக்காததால் பல சிரமங்களுக்குள்ளாகின்றனர். இ. தோ. தொ. செங்கொடிச் சங்கம் அட்டன் தொழில் நீதிமன்றத்தில் இந்தியா போகும் ஒரு தொழிலாளியின் சார்பாக பென்சன்கேட்டு வழக்குப் போட்டது. வழக்கை விசாரித்த நீதவான் பென்சன் கொடுக்க வேண்டுமென உத்தரவிட்டார்.

இத்தோட்டம் தமிழரசுக் கட்சியின் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுடைய குடும்பத்தாருக்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது.

—நன்றி "செங்கொடி" ஜனவரி 1974

# உணவு நெருக்கடியும் நாமும்

—கலாநிதி சி. சிவசேகரம்

இப்போது உணவு நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள். உணவுத் தட்டுப்பாடு இருக்கிறது என்பது உண்மை ஆனால் அது இப்போது புதிதாக ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடிதானா என்பது மிகவும் கேள்விக்குரிய விஷயம்.

உணவுப் பற்றாக் குறைக்கு முக்கிய காரணம் உணவு உற்பத்திக் குறைவென்றால், இக்குறைபாடு இன்று நேற்றல்ல, இருபத்தைந்து வருடங்கள் முன்பல்ல. இன்னும் பல வருடங்கள் முன்பு வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் இந்த நாட்டின் மலைவளத்தைப் பாழ்படுத்தி நதிகளை மண்படியச் செய்த அன்றே தோன்றிவிட்டது. இக்குறைபாடு உணவு இறக்குமதித் தட்டுப்பாட்டால் ஏற்பட்ட பிரச்சனை என்றால் அது உலகின் முதலாளித்துவ பொருளாதார முறையின் நெருக்கடிகளால் குறிப்பாக ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் முறையின் நெருக்கடிகளால், உருவான ஒன்றாகும். எனினும் நம்மைப்பொறுத்தவரை உணவு உற்பத்திப் பற்றாக்குறை ஒரு முக்கியமான பிரச்சனை என்பதையும் அதனை நாம் ஒரு சுய ஆதார சுயாதீன முறையில் தீர்ப்பதன் மூலமே நம்மீது ஏகாதிபத்தியம் கொண்டுள்ள இரும்புப் பிடியை முறியடிக்க முடியும் என்பதையும் உணரவேண்டும். நாம் ஏகாதிபத்திய சுரண்டலினின்று மீளாமல் நமது பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்ப்பது எவ்வகையிலும் சாத்தியமல்ல. இந்த அடிப்படையினின்று, நமது நாட்டின் உணவுப் பிரச்சனைக்குத் தேடப்பட்ட பரிகாரங்களையும் காட்டப்படும் தீர்வுகளையும் கவனிப்போம்.

உணவுப் பற்றாக்குறையை எடுத்துக் கொண்டால் அப்பிரச்சனையின் முக்கியமான இரு கூறுகள் உணவு உற்பத்தியும் உண்பவர்களது தொகையும் ஆகும். இதைத் தீர்ப்பதற்கு உணவு உற்பத்தியைப் பெருக்குவதையே வழியாக நாம் கருதுகிறோம். இதனை இன்றைய சமுதாய அமைப்பின் கீழ் சாதிக்க முடியுமா என்பது வேறு பிரச்சனை. இச்சமுதாய அமைப்பினுள் இது முடியாமல் போகும் பட்சத்தில் சனத்தொகையைக் குறைப்பதே வழி எனும் மார்க்கத்தைச் சிலர் ஆதரிக்கின்றனர். இது உணவு உற்பத்தியைப் பெருக்க வழியற்றவர்களது கையாலாகாத் தனத்தையே சுட்டிக்காட்டுகிறது. ஏகாதிபத்தியம் ஒருபுறம் நவீன விஞ்ஞான முறைகள் மூலம் வருடத்தில் ஏக்கருக்கு 10 தொன் தானியம் *உற்பத்தி செய்ய முடியும் எனப் பிரகடனம் செய்கிறது. இதன்படி இலங்கையில் இன்று நெற் செய்கைக்குட்பட்ட காணிகளில் கொள்ளையளவில் 1½ கோடி தொன் தானியம் உற்பத்தி செய்ய முடியும். இதன்படி (உமியைக் கழித்துக் கணக்கிட்டு, தனிநபருக்கு வருடத்திற்குச் சராசரி 3 அந்தர் தானியம் என்று வழங்கினால்கூட) 10 கோடி பேருக்கு வேண்டிய தானியம் உற்பத்தி செய்யலாம் (நமது சனத்தொகை 1½ கோடி கூட இல்லை.) இதையெல்லாம் ஒதுக்கிவிட்டு இவர்களது உயர் ரக நெல்வகைகள் ஏக்கருக்கு 100 புசல் வழங்கினால் ஒரு போகத்தில் மட்டுமே நமக்கு வேண்டிய வாரத்திற்கு 2 கொத்து அரிசி கிடைத்துவிடும். நிலைமை இப்படி இருக்க சனத்தொகைப் பிரச்சனையும், நமது உணவுத் தட்டுப்பாடும் எல்லாமே முன்னுக்குப்பின் முரணாக இல்லையா? எனவே உண்மை நிலையை அவதானிப்போம்.

சனத்தொகை அதிகரிப்பு ஒரு பிரச்சனைதான் என்றாலும், அது முக்கியமான பிரச்சனை அல்ல. சனத்தொகைப் பிரச்சனை என்பது சில சூழ்நிலைகளில் சனத் தொகை குறைவாகவும் இருக்கலாம். ஒரு சரியான சமுதாய அமைப்பின்கீழ் மக்களது உழைக்கும் சக்தியை முறையாக ஸ்தாபனப் படுத்துவதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்

* ஆதாரம்; ஊற்று, விவசாயச் சிறப்பு மலர் இல: 647—1973.

கலாம் என்பது மட்டுமல்லாமல், பெருகும் சனத்தொகை சில சூழ்நிலைகளின் கீழ் மேலும் உணவு, தொழில் உற்பத்திப் பெருக்கத்தைக் குறிக்கும் என்பதற்குச் சரித்திரத்தில் உதாரணங்கள் பல உண்டு. இந்த சனத் தொகைப் பிரச்சனை மால்த்தஸ் என்பவரால் ஒரு நூற்றாண்டு முன்பு (உலகின் சனத் தொகை அப்போது 100 கோடி இன்று 350 கோடிக்கு மேல்) முன் வைக்கப்பட்டது. இன்னும் மால்த்தஸ் எதிர்பார்த்தபடி உலகம் அழிந்துபோய் விடவில்லை. தொழிற்புரட்சியின் போதும் அதை ஒட்டிய பொருளாதார வளர்ச்சியின்போதும் ஐரோப்பிய சனத்தொகை பெருகியதுபற்றி யாருமே கவலைப்படவில்லை. சோஷலிஸ அல்பேனியா இன்று பெருகிவரும் தன் சனத்தொகை பற்றி மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின் 10 க்கு மேற் குழந்தை பெற்ற மாதர்களை ஸ்டாலினின் தலைமையின் கீழான சோவியத் அரசு வீரத்தாய் எனப் பாராட்டிப் பதக்கம் வழங்கியது. எனவே இந்த சனத்தொகை பற்றிய அழுகை ஒரு சமுதாய அமைப்பின் கையாலாகாத்தனத்தின் பிரதிபலிப்பேயாகும். இதற்காக சனத்தொகையைக் கட்டுப்படுத்தவே கூடாது என்று கூறுவதாகக் கருதக் கூடாது. உற்பத்தியைப் பெருக்குவதனை நாம் சாதித்த பின்னர் சனத் தொகைப் பிரச்சனையைப்பற்றிச் சிந்திக்கலாம். இன்றைய நிலையில் நம்மால் ஒரு திட்டமிட்ட பொருளாதார அமைப்பின் கீழ் நாட்டில் உள்ள சனத்தொகையைப்போல் மூன்று மடங்கு மக்களுக்கு வேண்டுமானாலும் உணவளிக்க முடியும் என்பது தான் உண்மை.

இலங்கையில் உணவு உற்பத்தியை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகளை நாம் இனிக் கவனிப்போம்.

முதலாவதாக—குடியேற்றத் திட்டங்கள். குடியேற்றத் திட்டமென்பது ஒருவிதமான சமுதாய ஸ்தாபனப்படுத்தலுமின்றி மாதாமாதம் பண உதவி கொடுத்து மனிதர்களை எங்கேயாவது ஒரு குளக்கரையில் உள்ள காட்டில் குடியேற்றுவது என்பது சிலபேருடைய கருத்து. இன்னும் சில பேர் நிறைய அந்நிய மூலதனம் செலவிட்டுப் பெரிய விவசாயத் திட்டங்களை உண்டாக்கி இயந்திர வகைகளை எல்லாம் கொட்டிக் குவிப்பதுமூலம் விவசாயத்தை ஊக்குவிப்பது என்று கருதுகிறார்கள். இந்த அர்த்தமற்ற விளையாட்டுகளது பலாபலன்களை நாம் கல்லோயா, கந்தளாய்த் திட்டங்களின் கடந்தகாலத் தோல்விகள் மூலம் அனுபவித்துள்ளோம். இந்தப் 'புரட்சிகளது' தொடர்ச்சியாக 1965 — 1970 கால கட்டத்தில் தொழில்நுட்பமூலம் இந்த நாட்டில் ''பசுமைப் புரட்சி'' புகுத்தப் பட்டது. இந்தப் பசுமைப் புரட்சியின் அர்த்தம்தான் என்ன ?

இலங்கையிற் பரம்பரை பரம்பரையாகப் பயிரிடப்பட்ட நெல் மற்றும் உணவு வகைகளை ''உயர் விளைச்சல்'' ரகங்களால் இட்டு நிரப்பி இல்லாமல் செய்து, வழமையாக விவசாயிகள் பழக்கப்பட்ட தழை உரம்போன்றவற்றை மறக்கடித்து இரசாயன உரங்களைப் புகுத்திப் பூச்சிக்கொல்லி, பூண்டுக் கொல்லி, வைரஸ் வியாதிக்கு மருந்து, பக்டீரியா வியாதிக்கு மருந்தென்று பலவகையான ரசாயனப் பொருட்களைக் குவித்து, எருமைகட்குப் பதிலாக இரண்டு சில்லு ட்ராக்டர் நாலு சில்லு ட்ராக்டர் என்றெல்லாம் கொண்டு வந்துகொட்டி, இந்த நாட்டின் பழைய விவசாய முறையை முற்றாகமுறியடித்து இந்த நாட்டை முழுக்கமுழுக்க அந்நிய ஏகாதிபத்தியத்தின்மீது தங்கியிருக்கச் செய்ததுதான் இந்தப் பசுமைப் புரட்சி!

பசுமைப் புரட்சியால் உணவு உற்பத்தி அதிகரித்ததாகப் பேசிக்கொள்கிறார்கள். இவர்களது பசுமைப் புரட்சி ஏற்படுத்திய மேலதிக விளைச்சல விவசாயத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்ட மேலதிக காணியுடனும் பயன்படுத்தப் பட்ட உரவகைகள், ரசாயனப் பொருட்கள் (இறக்குமதி செய்யப்பட்டவை!) ஆகியவற்றுடனும் எந்த வகையிலும் விகிதாசாரமுடையதா? உண்மையில் நடந்ததென்ன? சகலவித நீர்ப்பாசன வசதிகளையும் கொண்ட நல்ல நிலத்தில் பரிசோதனைக்கூட நிலைமைகளுள் ஏக்கருக்கு 100, 150 புசல் விளைச்சல் தரும் நெல்வகைகளைச் சரியான வகையில் உரமிட்டு, மருந்து

தெளித்து நிரூபித்துக் காட்டினார்கள். அந்த நெல் வகைகள் நாட்டின் யதார்த்தமான நிலையில் பிரயோகிக்கப்பட்ட போது எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. கிடைத்த பலன்கூடப் பொருளாதார வசதிகூடிய விவசாயிகளுக்கே ஏற்பட்டது. இன்று பெற்றோல், இயந்திர வகைகள், இரசாயன உரங்கள், மருந்துகள் என்பனவற்றின் விலைகள் மூன்று, நான்கு மடங்கு ஏறிவிட்ட நிலையில், நமது அந்நியச் செலாவணி நெருக்கடியின்கீழ் உரம் வாங்க வகையின்றி, இயந்திரங்களுக்கு உதிரிப்பாகங்களின்றி நாம் தத்தளிக்கிறோம். நமது பழைய விவசாய முறைகட்குத் திரும்புவதுகூட மிகவும் கஷ்டமாக உள்ள நிலைக்கு இந்தப் பசுமைப் புரட்சி நம்மைக் கொண்டுவந்துள்ளது. ஏற்கனவே அதிகமாயிருந்த எரிபொருள், இயந்திர உதிரிப்பாக, இரசாயன உர, மருந்து விலைகள் இன்று எண்ணெய் விலை உயர்வையும் பெருமுதலாளித்துவ நாடுகளது பொருளாதார நெருக்கடியையும் ஒட்டிப் பன்மடங்கு அதிகரித்துள்ளன. இது அந்நியச் செலாவணித் தட்டுப்பாட்டுடன் இணைய நமது ''அதிக விளைச்சல்'' நெல் உற்பத்தி பசுமைப் புரட்சிக்கு முன்பிருந்த ''பாரம்பரிய'' நெல் வகைகளினதும் கீழ் வீழ்ந்துவிடும். எனவே நாம் அந்நியர் கடன் சுமையை ஏற்றி உரம் இத்தியாதிகளை இறக்குமதி செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறோம் அல்லது குறைந்த நெல் விளைச்சல் காரணமாக மேலும் உணவு இறக்குமதிக்குக் கடன் வாங்க நிர்ப்பந்திக்கப் படுகிறோம். எதுவானாலும் வெற்றி ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்புரட்சிக்கே! இது ஒரு புறமிருக்க புதுரக நெல் வகைகளுடன் சேர்த்துப் புதிய களை வகைகள் புகுத்தப்பட்டுள்ளன. ''மினிகட்டு'' எனும் புதிய களை அது வளர்ந்து மலரும் வரை நெல்லினின்று வேறுபாடு காண முடியாத காரணத்தால் உரத்தில் கணிசமான பகுதியை அது பயன்படுத்திக் கொள்கிறது. தென்னைக் கொல்லிப் பூச்சியான 'குமிங்கி' இந்த நாட்டில் இரு வருடங்கள் முன்பு புகுத்தப் பட்டதை நாம் மறந்திருக்கமுடியாது. இவை மட்டுமன்றிப் பசுமைப் புரட்சியின் போது பல மிருக, தாவர நோய்களை ஏகாதிபத்திய வாதிகள் இந் நாட்டிற்குட் புகுத்த எடுக்க முயற்சிகள் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன*. செறிவான உரப் பிரயோகம், மண்ணுள் வாழும் விவசாயத்திற்குப் பயனுள்ள உயிரினங்கட்குத் தீங்கானது. சில ரசாயன உரங்களும் மருந்துகளும் மண்ணுக்கும் சுற்றாடலுக்கும் தீங்கானவை என்பன போன்ற தகவல்களை இன்று ஏகாதிபத்திய நாட்டு விஞ்ஞானிகளே சுட்டிக் காட்டுகின்றனர். பம்பிகளது அளவு மீறிய பிரயோகம் இன்று யாழ் குடா நாட்டில் நன்னீர் நிலவரத்திற்கு ஆபத்தான நிலையை ஏற்படுத்தியுள்ளதைப் பலர் அறிவோம். இவையும் இன்னும் பலவும் ஏகாதிபத்திய வாதிகளது திட்டமிட்ட சதிகளாலும் எமது அறியாமையாலும் குருட்டுக் கனமான தொழில் நுட்பப் பிரயோகத்தாலும் நமது பொருளாதாரத்திற்கும் உணவு உற்பத்திக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள இன்னல்களாகும்.

நாம் இவற்றினின்று மீள்வதாயின் பல பெரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நமது பாரம்பரிய நெல் மற்றும் பயிர் வகைகளை மீட்டுப் பயிரிட வேண்டும். தழை உரங்களது பிரயோகத்தை அதிகரிப்பதுடன் மனித, விலங்குக் கழிவுப் பொருட்களில் உள்ள உரத்தன்மையை முற்றாகப் பிரயோகப்படுத்த வேண்டும். மனிதக் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்துவதன்மூலம் நமது இறக்குமதி உரத் தேவையின் பெரும் பகுதியை நாம் குறைக்க முடியும். எருமைகளின் வளப்பிற்குக் கவனம் செலுத்துவதுடன் பிற கால் நடைகளையும் நாம் விருத்தி செய்வதனால் புரத உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். நம் மீன்வளம் இன்றும் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளால் சுரண்டப்பட்டு வருகிறது. நம் கடல் வளத்தை அந்நியர் சுரண்டுவதை நாம் தடுக்கும் முயற்சிகளில் ஈடுபடுவதுடன் நாம் மீன்பிடி வசதிகளைப் பெருக்குவதில் முதலீடு செய்வது பயனுள்ளது. இதற்காக ஒரு பெரு வல்லரசு கடன்தர முன்வந்த போதும் அது நம் கடல்

---

* ஆதாரம்: விவசாயத் திணைக்கள தொழிற் சங்க சம்மேளனம் ஐ. நா. உணவு விவசாய ஸ்தாபனத்திற்கு (FAO) சமர்ப்பித்த மாஜர் (15-9-1973)

வளத்தின்மீது நமது உரிமைகளை நாம் போணுவதை எதிர்ப்பதனால் அவ்வுதவியைப் பெறமுடியாது போயிருப்பது கவனத்திற்குரியது*. மலைகளில் காடுகளை வளர்ப்பது நீண்ட காலத்தில் நமது மரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் மண்ணின் நீர் தேக்கும் தன்மையைப் பேணி மண் கரைவதையும் தடுப்பதாகும். நட்டத்தில் நடத்தப்படுவதாகக் கூறப்படும் தேயிலைத் தோட்டங்களில் உப உணவு வகைகளைப் பயிரிடுமாறு வேலையற்ற தோட்டத் தொழிலாளர்கட்கும் நிலமற்ற மலைநாட்டு விவசாயிகட்கும் அவற்றை விநியோகிக்க வேண்டும். பயிர்ச்செய்கையில் பிரதேசத்திற்கு ஏற்றவாறு பயிர்களை வளர்ப்பதில் கவனம் காட்ட வேண்டும். நீர்த்தேக்க, நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதில் உள்நாட்டில் உள்ள மனித உழைப்புச் சக்தியை நாம் அணிதிரட்ட வேண்டும். மேற்கூறியவற்றின் அர்த்தம் நாம் இரசாயன உரங்களை முற்றாகப் புறக்கணிக்க வேண்டும் என்பதோ அல்லது முன்னேற்றிய பயிர்வகைகளைப் பயிரிடக்கூடாது என்பதோ அல்ல நாம் நமது அடிப்படை உணவு உற்பத்தி நிலையை உறுதியான சுய ஆதார அடிப்படையில் நிறுவிய பின்னர் முன்னேற்றிய பயிர்வகைகளை அபிவிருத்தி செய்வதைத் திட்டமிட்ட முறையிற் செயற்படுத்த முடியும். ஆனால் அடிப்படை நிலவரமே உறுதியற்ற நிலையில் ஏகாதிபத்திய தொழில் நுட்பத்தை நம்பித் தேசிய ரீதியில் விஷப் பரீட்சைகளில் ஈடுபடுவது எவ்வளவு பயங்கரமானது என்பதை அண்மைய நிலவரமே உணர்த்தும். நாட்டில் இரசாயன உர உற்பத்திச் சாலை நிறுவுவது பயனுள்ளதே. எனினும் இதைக் கடன்பட்டு நிறுவுவதன் சிக்கனத்தை நாம் கவனித்தே செயற்பட முடியும்.

இச்சிறு கட்டுரைமூலம் இந்த நாட்டின் உணவுப் பிரச்சனையை முற்றாக அலச முடியாது. ஒரு தனி மனிதனால் இத்தகைய ஒரு பிரச்சனையின் சகல அம்சங்களையும் முழுமையாக ஆராய முடியாது. இக்கட்டுரையின் நோக்கம் ஏகாதிபத்தியவாதிகளது சுரண்டலுக்கும் சூழ்ச்சிகட்கும் நாம் தொடர்ந்தும் பலியாகிக் கொண்டு இருப்பதையும் அதனின்று மீள்வதற்கான தேவையையும் பிரச்சனைக்குரிய தீர்வின் ஒரு சில அம்சங்களையும் சுட்டிக்காட்டுவதேயாகும்.

நடைமுறையில் ஈடுபடும் பெருவாரியான விவசாயத் தொழிலாளர்களது அனுபவத்தின் அடிப்படையில் விஞ்ஞான ரீதியான ஒரு ஆராய்வின்மீதே நாம் நமது உணவு நெருக்கடியைத் தீர்க்க முடியும். இத்தகைய தீர்வு ஊழல் மலிந்த இன்றைய சுரண்டற் சமுதாயத்திற் காணக்கூடிய ஒன்றென நம்பமுடியாது. ஆனால் சமுதாயம் மாறிவருகிறது. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான எழுச்சி வேகம் பெற்று வருகிறது. அதன் விளைவாக உருவாகும் ஒரு புதிய சமுதாயம் நமது பிரச்சனைகளுக்கு வெகுஜன அடிப்படையிலான புதிய விடையைத் தரும் என நம்பலாம்.

"நமது கொள்கை சார்ந்திருக்க வேண்டிய அடிப்படையாது? அது நமது சொந்த பலத்தைச் சார்ந்திருக்க வேண்டும். அதன் அர்த்தம், ஒருவர் தமது சொந்த முயற்சிகள்மூலம் புதுவாழ்வு பெறுவதாகும். நாம் தனிமைப்பட்டு நிற்கவில்லை. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான எல்லா உலக நாடுகளும் மக்களும் நமது நண்பர்கள். இருந்தும், நமது சுயமுயற்சிகள் மூலம் புதுவாழ்வு பெறுவதை நாம் வற்புறுத்துகின்றோம். நாம் சுயமாக அணிதிரட்டும் சக்திகளைச் சார்ந்து. உள்நாட்டு வெளிநாட்டுப் பிற்போக்குவாதிகள் அனைவரையும் எம்மால் தோற்கடிக்க முடியும்."

---

* ஆதாரம்; இலங்கைப் பல்கலைக் கழகத்தில் (பேராதனை வளாகம்) ஜூலை 1973-ல் டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்ஹனின் உரை.

★ ★ ★

# இளைஞனே ...!

**நக்கீரன்**

இளைஞனே !
சக்தியின் ஊற்றே !
காலை இளங்கதிரின்
கனல் வீச்சே !
நீ. தீயாய் உமிழ்
தீமைகள் பொசுங்கட்டும்
இருட்பனி ஓடி
வெம்மை ஓங்கட்டும் !
உன் ஆற்றலை—
கட்டுத்தறி யறுக்கும்
புரோமிதியஸ் பணியை
பூமியிற் செய்யும்
வேகத்தை இங்கு
எல்லோரு மறிவர் !
நீ புரோமிதியஸ் மட்டுமல்ல
அக்கினி குமாரன் நீ
அனுமன் சீதைக்காய்
அக்கினியைப் பரப்பினனே
அவனையும் மிஞ்சி—
மக்களுக்காய்
அல்லும் பகலும்
பாடுபடும் தோழருக்காய்
அணுவாய்
அதனைச் சுற்றும்
எலெக்ட்ரோனாய்
புரோட்டோனாய்
மோதலினால் மேலும்
சக்தி விரிவடையும்
மகோன்னதனாய்
தீமையை எரித்து
ஆக்கத்தை ஊக்கு !
உன்னை மடக்க
உன் தீ ஜுவாலையை
அணைக்க—
ஹிப்பிகளாய்
ஹிப்பிக்குள் மறைந்த
ஹரே கிருஷ்ணாவாய்
இன்னும்
எத்தனையோ பேர்களோடு
எத்தனையோ ரூபத்தில்
சதிகாரர் வருவர்—
சற்றும் வளையாதே
சற்றும் மலைக்காதே
பாதையைப் பார்த்து
பயணத்தைத் தொடர்—
தீமையை அழித்து
புதுயுகஞ் சமைக்கும்
வரலாற்றுப் பணியை
வகையாய் முடி !

★ ★ ★

# பொது ஆட்சி மலர ...!

**—செ. மகேந்திரன்**

பூனை அடுப்படி தன்னிலே— தினம்
புரண்டு படுக்குது சோம்பலில்—வெறு
பானை கிடக்கும் பரணிலே — அவள்
பாவி கிடக்கிறாள் மூலையில்.

கந்தைத் துணியின் மறைப்பிலே —மடி
காய்ந்து கிடக்கு வெறுமையில்—அதை
விந்தை மழலை பசியிலே — கௌவி
வீழ்ந்து துடிக்குது சோர்வினால்.

கஞ்சியெனத் தினம் கூவியே —அவள்
கால்கள் வலித்திட வீதியில் - எங்கும்
கெஞ்சி அலைந்துடல் வாடியே—ஏதும்
கிட்டா நிலையிற் தவிக்கிறாள்.

வேலை அவளுக் கொன்றில்லை—அவள்
வேதனை நீங்க உறவில்லை — ஒரு
காலை உடற்பசி போக்கினால்— அவள்
கஞ்சிக் கலயம் நிறையுமோ !

நீளப் புவியவள் ஏழ்மையை—கொடும்
நெஞ்சொடு நோக்கியே பார்க்குது — துயர்
ஆளும் புவிநிலை மாற்றுவோம் —பொது
ஆட்சி மலரப் போரிடுவோம்;

# பிக்பொக்கெற்

மாலை. தி. நித்தியானந்தன்

நீண்ட தூர பஸ், புறப்படுவதற்குத் தயார். வண்டி நிறைய ஆட்கள் நின்றார்கள். கொண்டக்டர் மணியையடித்தார். வண்டியை 'ஸ்ராரர்ட்' பண்ண முன், சாரதி வழக்கம் போலக் கண்களை மூடிக்கொண்டு பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

திடீரென்று வண்டிக்குள் சலசலப்பு.

"பிடியடா அவனை!"

ஒரு சாரக்காரன் முன் பக்க வாயிலால் வெளியே பாய்ந்து ஓடினான். இரண்டு மூன்று பேர் அவனைத் துரத்திக் கொண்டு ஓடினார்கள்.

"பிடி அவனை! பிடி அவனை!" றோட்டில் நின்றவர்களை உதவிக்கழைத்தார்கள்.

ஆனால் அவனைப் பிடிக்க முடியவில்லை. 'பிக்பொக்கெற்' அடித்த பணத்தோடு அவன் ஓடி மறைந்துவிட்டான்.

துரத்திக்கொண்டு போனவர்கள் ஆத்திரம் பறக்க வந்தார்கள். "அகப்படடிருந்தானெண்டால், காலுக்குக் கீழை போட்டுச் சக்கையாக்கியிருப்பம் தப்பிவிட்டான்."

"பிழைப்புக்கெட்ட நாய்கள், பஸ்சுக்குள்ளை பிக்பொக்கெற் அடிக்குதுகள்." கொண்டக்டர் இரைந்தார்.

"இவங்கள் தரவளியளைப் பிடிச்சு, எல்லாரும் பார்க்க பப்ளிக்கிலை வைச்சு ஷூட் பண்ணவேணும்" என்றார், பளபளக்கும் பட்டுநிற நாஷனல் அணிந்த ஒருவர். தமது சூட்கேஸ், காலுக்குக் கீழ் பத்திரமாக இருக்கிறதா என்று அவர் ஒரு முறை கவனித்துக் கொண்டார். அதற்குள் கடத்தல் புடவைகளும் அபினும் இருந்தன.

குறிப்புரை சொல்பவர்களின் எண்ணிக்கை வரவரக் கூடியது. விதம் விதமாக அந்தப் 'பிக்பொக்கெற்' காரன் திட்டுவாங்கினான்.

கூலிங்கிளாசைச் சுழற்றிக் கைலேஞ்சியால் மினுக்கிக் கொண்டிருந்த ஒருவர், "சீவிக்க வழியில்லாவிட்டால் செத்துப்போறதுதானே இவங்கள்?" என்றார்.

இதுவரை வெளிப் பொக்கெற்றுக்குள் இருந்த ரூபா நோட்டுக்களை வெளியே எடுத்து, சேர்ட்டின் உட்புறத்தில் விசேடமாகத் தைக்கப்பட்டிருந்த உட்பொக்கெற்றுக்குள் பாதுகாப்பாக வைத்துவிட்டுப் பொத்தான்களைப் பூட்டியபடி ஒருவர் சொன்னார்: "உழைச்சுப் பிழைக்கத் தெரியாத மூதேவிக் கழுதையள். மற்றவன் சேர்த்துலைக்கிற பணத்தை அபகரிக்கப் பாக்குதுகள்."

"இந்த அரசாங்கம் எங்கும் பொலிஸ்காறரைப் போட்டு இவங்களை அமத்தினால் என்ன? கொஞ்சப் பேரைப் பிடிச்சுச் சரியான குடுவை குடுக்க, மிச்சப்பேர் அடங்குவார்கள்" என்று சொன்னவர், வளையம் வளையமாகப் புகையை ஊதியபடி, தலையில் அணிந்திருந்த தொப்பியைக் கழற்றி மடியின்மேல் வைத்தார். பக்கத்திலிருந்த அவருடைய மனைவி கூலிங்கிளாசை மீண்டும் பொருத்தியவாறு, "ஒவ்வொரு பஸ்சுக்குள்ளும் பொலிஸ் காவல் போட்டாலென்ன, இந்த கவர்ன்மென்ற்?" என்று தனது 'லிப்ஸ்டிக்' வாய் திறந்து கேட்டாள்,

பஸ்வண்டியின் நடுப்பகுதியில் நின்றுகொண்டிருந்த ஒரு இளைஞன், "பிக்பொக்கெற் அடிக்கிறதை நீங்களெல்லாம் நினைக்கிற உந்த வழியளாலை நிற்பாட்டேலாது. அதுக்குரிய அடிப்படைக் காரணத்தைக் கண்டறியவேணும்" என்றான். எல்லோரும் ஒரு விநோதப் பிறவியைப் பார்க்கிற மாதிரி அவனைப் பார்த்தார்கள்.

"அடிப்படைக் காரணம் என்ன கிடக்குத் தம்பி, இதுக்கு? சுகமாய்க் காசுழைச்சுச் சொகுசாய் வாழப்பாக்கிறாங்கள்" என்றார், கொஞ்சம் வயதுபோன ஒருவர்.

"அப்பிடி ஒரேயடியாய்ச் சொல்லிவிடேலாது. உழைச்சாலும் அதுக்கேற்ற சம்பளம்

கிடைக்கிறேல்லை. பகல் முழுதும் பாடுபட்டாலும் ஒரு கொத்து அரிசி வாங்கக் காசு போதாது. பசிவந்தால் பத்தும் பறந்து போம்" என்றான் இளைஞன்.

"அப்ப களவெடுக்கிறதோ?"

"களவெடுக்கிறது சரியெண்டு நான் சொல்ல வரேல்லை. ஆனால் ஏன் களவெடுக்கிறானெண்டு பார்க்க வேணும். இதுக்கு நாங்களுந்தான் காரணம், இந்தச் சமுதாயம் முழுதும்தான் பொறுப்பு. அவனை மட்டும் குற்றம் சொல்லிப்போட்டு நாங்கள் தப்பேலாது."

"தம்பி சும்மா உப்பிடித் தத்துவம் பேசி வேலையில்லை முதலிலை கள்ளனைப் பிடிச்சுக் குறி சுடவேணும்,"

"ஆனால் இதென்ன பெரிய களவு? ஒரு நேரச் சாப்பாட்டுக்காகக் களவெடுக்கிறான், ஆனால் பெரிய பெரிய புள்ளியள் கடத்தல் வேலை செய்து பணம் குவிக்கினம். முதலாளியள் ஆயிரக் கணக்கான ஏழையளின்ரை உழைப்பைக் கொள்ளையடிக்கினம். வர்த்தகப் புள்ளியள் பதுக்கல் வியாபாரம் பண்ணுகினம். மொத்தத்திலை எல்லாருமே லஞ்சம் வாங்குகினம். இவையளையெல்லாம் பொலிஸ் என்னேயுது? முதல் இவையளைப் பிடிச்சுத் தூக்கிலை போடவேணும்—" இளைஞன் சொல்லி முடிக்க முதல், "கொம்யூனிஸ்ட்!" என்று ஒரு குரல் பெரிதாகக் கேட்டது.

"இவன் கொம்யூனிஸ்ட்!"

"கொம்யூனிசம் ஊருக்குதவாது."

"கொம்யூனிசத்தை விடும், தம்பி, ஒற்றுமையாய்க் கதைப்பம்."

கொஞ்சம் தீவிரப் போக்குள்ள ஒருவன், "கள்ளர்! கொம்யூனிஸ்ட் பண்டியள்!" என்று கத்தித் தன் ஆத்திரத்தை வசதியாகத் தீர்த்துக் கொண்டான்.

எங்கிருந்தோ மூன்று ஆமதுருக்கள் ஓடிவந்து முன் பக்கக் கதவால் பரபரவென்று ஏறினார்கள். பஸ் புறப்படத் தாமதித்ததால் அவர்களுக்கு நன்மை.

அவர்கள் தமக்கென ஒதுக்கப்படும் ஆசனத்தை ஒற்றுமையாக முறைத்துப் பார்த்தார்கள். உடனே, அதில் அமர்ந்திருந்த கிழவரும் இரு சிறு பையன்களும் எழும்பிக் கொண்டார்கள். கைக்குழந்தையுடன் இருந்த பெண்ணும் எழும்பி நின்றாள். ஆமதுருக்கள் உட்கார்ந்தபின், பிக்பொக்கெற் நடந்த விஷயத்தைச் சாரதி அவர்களுக்கு விளக்கமாகவும், மரியாதையாகவும் சொன்னார்.

"உலகத்தில் பாவம் மிஞ்சிவிட்டது" என்றார் ஒரு ஆமதுரு.

"சமய நம்பிக்கை குறைந்ததுதான் எல்லாவற்றுக்கும் காரணம். தெய்வ பயம் இல்லாமற் போச்சு. பஞ்சசீலத்துக்கும் மதிப்பில்லை. அநியாயம் மிஞ்சி உலகம் அழியப் போகிறது" என்றார் இரண்டாவது ஆமதுரு.

"களவெடுத்துக்கொண்டு ஓடியவன் பௌத்தனோ கிறிஸ்தவனோ தெரியேல்லை. கிறிஸ்தவனாயிருந்தால் கூட, யேசு களவெடுப்பது பாவமென்றுதானே சொல்லியிருக்கிறார்" என்று மூன்றாவது ஆமதுருதாமும் எதையோ கண்டுபிடித்துச் சொல்லிவைத்தார்.

"களவெடுத்தவனைப் பிடித்து நசித்துக் கொன்றிருக்க வேணும்" என்று ஆரம்பித்த முதலாம் ஆமதுருவை மற்றவர் தடுத்து நிற்பாட்டினபோதுதான் அவர் தமது பிழையைக் கிரகித்துக் கொண்டார்.

"சரி, போவம்." பின்னிருந்து கொண்டக்டர் உரத்துச் சொல்லி, மணியை அடித்தார். சாரதி மீண்டும் மௌனப் பிரார்த்தனை செய்தபின், பஸ் ஓடத் தொடங்கியது.

புழுக்கத்தில் அவிந்தவர்கள் இப்போது சுகானுபவம் அனுபவித்தார்கள் பிக்பொக்கெற்காரனைப் பற்றிய கதையோ ஓய்வதாயில்லை.

"தீஸ் அன்ரி சோஷல் பாஸ்ற்ராட்ஸ் சுட் பீ கோற் அன்ட் ஹாங்ட். தெயர் இஸ் நோ அதர் வே ஒவ் சேவிங் அவ சொசயட்டி ப்ரொம் டிஸாஸ்ரர்" (இந்த சமூக விரோத வேசைமக்கள் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட வேண்டும். எமது சமூகத்தைத் திருத்துவதற்கு இதைத் தவிர வேறு வழியில்லை) என்று யாரோ ஒருவர் ஆங்கிலத்தில் வெளுத்து வாங்கினார்.

''அற இஸ் குலைற்ருறு.'' (இது மிகவும் சரியானது.)

''இவங்களேக் கண்டதுண்டமாய் வெட்டிக் காகங்களுக்கு இரையாய்ப் போடவேணும்'' என்ருர் நரைத்த தாடிவிட்ட, கண்ணுடி போட்ட ஒருவர்.

சாரதி, பஸ்சை நிற்பாட்டிவிட்டு இறங்கி, வழமையாகச் செய்வதுபோல் தெருவோரக் கோவில் ஒன்றில் அவசர அவசரமாகக் கும்பிட்டுவிட்டு மீண்டும் வந்து ஏறிக்கொண்டார்.

ஓடியவனைத் துரத்திக்கொண்டு போனவர்களில் ஒருவர் உஷார் வந்தவராக, ''அவன் மட்டும் இன்னைடக்கு அகப்பட்டிருந்தானென்டால், பிடிச்சுப் பிழிபிழியெண்டு பிழிஞ்சு, சாருக்கிச் சக்கையாக்கிக் குடலும் உரிச்சுத் தூக்கியிருப்பன், நாயைருஸ்கல்!'' என்று உரத்துக் கூறினர். இப்பொழுது பஸ் மீண்டும் புறப்பட்டுக் கொண்டிருந்தது.

திடீரென்று ஒருவன் முன்புற வழியால் வெளியே குதித்து தலைதெறித்த வேகமாய் ஓடினன்.

''பிடி; கள்ளன்! உவன் கள்ளன்! ஓடுருன்! பிடியுங்கோ,'' மீண்டும் பஸ்சில் பெரும் பரபரப்பு. ஆனல் ஓடியவனைப் பிடிக்க முடியவில்லை. பற்றைகளுக்கூடாகச் சென்று அவன் மறைந்துபோனன்.

''பிக் பொக்கெற் அடிச்சுக்கொண்டு போட்டானே'' என்று களவு கொடுத்தவர் அழாக்குறையாக நின்ருர்.

''சாய், பாரன். எவ்வளவு துணிச்சல், நாங்கள் கதைச்சுக்கொண்டிருக்கேக்கையே...''

''சச்சாய், இவனையும் விட்டிட்டமே.''

முன்னர் கதைத்த இளைஞன் பக்கத்தில் நின்றவருக்குச் சொன்னன்; ''பிடிபட்டால் சாருக்கிக் குடலும் உரிப்பமெண்டு சொல்லிக்கொண்டிருக்கேக்கையே, கேட்டுப்போட்டும் களவெடுத்துக்கொண்டு ஓடுருன். சமுதாய மாற்றத்தாலை மாத்திரம்தான் இதுகளை நிற்பாட்டலாம். உழைப்பை மதிக்கிற சமுதாயம் வரவேணும், தனியுடைமையும் சுரண்டலும் ஒழியவேணும். அப்ப பிக் பொக்கெற் அடிக்கிற தேவையே இராது.''

## இரண்டு பார்வைகள்!

''ஐக்கிய நாடுகள் சபையினது பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றின் மீதும், அவ்வவற்றினுடைய ஆயுதச் செலவுகள் எவ்வளவு கூடியவை, குறைந்தவை என்ற எவ்வித வேறுபாடுமின்றி அல்லது அவற்றினது ஆயுதங்களின் தர வித்தியாசங்களைக் கணக்கிலெடுக்காமல் ஒவ்வொரு நாட்டின்மீதும் 10 வீத வெட்டை அமுல்படுத்துவதன் மூலமாக ஆயுதப் பரிகரணத்துக்கு சேவையாற்றுவதிலோ அல்லது குமுறல்களைக் குறைப்பதிலோ என்ன நன்மை இருக்கிறது? இது வீட்டுநெருக்கடியைச் சமாளிப்பதற்காக 2,400 சதுர அடி நிலத்தில் 10 அறைகளைக் கொண்ட வீட்டையுடைய பணக்கார உடமையாளனை 240 சதுர அடியை, பொது வீட்டு அதிகாரியிடம் கொடுக்கும்படி கேட்கும் அதே வேளையில், 240 சதுர அடி நிலத்தில ஒரு குடிசையைக் கொண்டிருக்கிற ஏழைப் பாட்டாளியை அவனுடைய வாழ்விடத்தில் 24 சதுர அடியை விட்டுக் கொடுக்கும்படிகேட்பதைப் போன்றதாகும்.''

— ஐ. நா. பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகளும் தமது இராணுவச் செலவில் 10 வீதத்தை வெட்ட வேண்டுமென்ற சோவியத் யூனியனின் நகல் பிரேரணையின் விவாதத்தின்போது, இலங்கைப் பிரதிநிதி திரு. எச். சேர்லி அமரசிங்கா இவ்வாறு கூறினர்.

# தோழிக்கு....!

—எழிலமுதன்

ஓ.....தேத்தளிர்கள் பறிக்கும்
என் பிரிய தோழியே
கன்னிப்பருவக் காலத்தில் நின்று
வசந்தகாலக் கற்பனைகளில்
நீந்தி மகிழ்ந்திட வேண்டிய நீ
ஏனிந்த குளிர்ச்—சிகரங்களில்
ஏங்கிக் குனிந்து வாழவேண்டும் ?
பருவக் கனவுகளில் குளிக்கவேண்டிய
நீயேன்
வியர்வைக் கடலில் அமிழவேண்டும் ?
நீ சுமக்கும் தளிர்க் கூடைகள்
நெடுக உன்னை அழுத்தி நசுக்க
நீயெதற்கு ஒடுங்கி வாழவேண்டும் ?
நீயென்ன கொழுந்துக் கூடை சுமக்க
பிறவிச் சாபம் பெற்று வந்தவளா ?
உன் வசந்தக் கனவுகளை
பருவம் பூரிக்கு மெழிலைச் சிதைத்து
ஊனமிறக்கும் உடலுழைப்பை
உறிஞ்சி வாழும் சிலர்
உயர்மட்ட வகுப்பினராக
நீயேன் ஒட்டடையினட் குகைகளிலிருந்து
உயிரைச் சுருக்க வேண்டும்.

பிரிய என் தோழியே......!
வைகறைச் சேவல்கள் கூவுகின்றன
எப்போ விடியுமென்ற வினாவுக்கு இனி
விடையிறுக்க வேண்டியதில்லை
வசந்தமொன்றின் வரவு நோக்கி
வழியமைக்கும் தோழர்களாய்
நாங்களிங்கிருக்க
நமக்கெங்கே நல்வாழ்வு என்ற
நசிவுணர்ச்சி உனக்கு வேண்டாம்
இனி வரும் காலங்களில் உன்
ஏக்கப் பெருமூச்சொலிகள்
எங்களுக்கு எட்டாது
ஏனென்றால்
அப்பொழுது நீ வசந்தகால வானம்பாடி
யாய்
சிறகடித்துப் பாடும் ஜீவிய கீதம்
எங்களை அமிழ்த்தி விடும்.

★ ★ ★

# புதுமை

—அன்புடீன்

"ஆண்டாண்டாக அரவணைத்தாளும்
அந்த வழிகள் அனைத்தும் காத்து
இந்த உலகில் புதுவழி செல்வோம் .."
—இப்படிச் சொன்னவர்
எங்களின் தாத்தா .. ,

"அந்த வழிகள் அப்படியிருக்க...
அந்த வழிகள் அனைத்தும் தாண்டி
இந்த உலகில் புதுவழி செய்வோம்..."
—இப்படிச் சொன்னவர்
எங்களின் தந்தையார்...,

"அந்த வழிகள் அனைத்தும் அறுத்து
அந்த வழிகள் அனைத்தும் திருத்தி
இந்த உலகில் புதுவழி செய்வோம்..."
—இப்படிச் சொன்னவர்
இன்றைய இளைஞர்...,

"இந்தக்களரி ஒன்று நிகழும்...
இருள்கள் யாவும் இறந்து மறையும்...
வருத்தப்பட்ட மக்கள் வாழ்வு
வளங்கள் பெற்று மலர்ச்சி காணும்..."
—இப்படி அந்த
இளைஞர் இரைந்து
விரைந்து போயினர் !

★ ★ ★

# பருவத்தின் பாடல்

—சிவ்சாகர்

வால்கா நதி*
உறைந்து போய்விட்டது.

விழிகளை அடைக்கும்
வேக அலைகளுடன்
ஆர்ப்பரித்து வருகிறது
அதோ
யாங்ட்சே நதி†

மயான அமைதியை
மண்ணில் எழுதப்
போராடிய எஃகுக் கழுகு
இதோ
மேகாங் நதியில்‡ வீழ்ந்துவிட்டது.

சைபீரிய வெள்ளைக் கரடி
தலைக்கிறுக்குப் பிடித்து
ஓடிய........

உசுரி வெள்ளத்தில்§
குப்புறக் கவிழ்ந்து
ஒரேயடியாய் மூழ்கிவிட்டது.

வால்கா உறைந்துவிட்டது ;
பாயும் வெள்ளமாய்
யாங்ட்சே வருகிறது.

பருவம் மாறிவிட்டது
கிரெம்ளின் —

பாட்டாளிகளின் அதிசயக் கோபுரம்
இன்று—
பேய்களின் பாடிவீடாகிவிட்டது.

டியன் மின் முன்னால்
பறக்கும் செங்கொடி
கலகநீதி தேடும் உலகின் கனவுகளுக்கு
அடையாள ஒளி வீசுகிறது.

வால்கா உறைந்து விட்டது
கிழக்குச் சிவப்பின்
விசாலமான பார்வையில்
யாங்ட்சே நதிதான்
வெள்ளமாகப் பாய்கிறது.

இன்று
மூடிய கரங்களுக்குள்ளே
சூரியோதயம நடக்கிறது !
பரந்துபட்ட உலகில்
குனிந்துவிட்ட தலைகள் எல்லாம்
மீண்டும் கம்பீரமாக
நிமிர்ந்தெழுகின்றன !
பூமித்தாயின மடியில் விழுந்த
சிவப்பு நட்சத்திரம்
புன்னகை புரிகிறது !

வீச்சரிவாள் துப்பாக்கிக் கத்திகள்
கூழாங்கற்கள் ரவைகள் !
ஆமாம்........

சாதரண மனிதன் போராடத் துணிந்து
விட்டான்.

கொந்தளிக்கும் போர்க்களத்தில்—
வீழ்ந்துபட்டவன்
வெற்றியாளனாய் மீண்டுவருவான் !

வால்கா உறைந்துவிட்டது
யாங்ட்சே அலைகளுடன்
ஆரப்பரித்து வருகிறது
பருவத்தின் பாடலுக்கு
ஆங்கார நடனமிடுகிறது !
இளைஞர்களின் இதய வெளிகளில்
புதிய வெள்ளோட்டமாய்
புதிய அலைகளுடன்
புறப்பட்டு வருகிறது.

---

* வால்கா—ரஷ்ய நதி
† யாங்ட்சே—சீன நதி
‡ மேகாங்—வியத்நாமிய நதி
§ உசுரி—ரஷ்ய-சீன எல்லையில் ரஷ்யப் பகுதியில் பாயும் நதி.

நன்றி : மனிதன் (தமிழ்நாடு) மே இதழ்

★ ★ ★

# புதுமாற்றம் பிறக்கட்டுமே!

— வானவரம்பன்

1

குட்டிக் கொழுத்தவர் கூடிக்கெடுத்தவர்
கொட்டம் முடித்திடுவோம்—பணக்
கோட்டை இடித்திடுவோம்
எட்டுத் திக்கிலும் கொட்டி முழக்கியே
எட்டி உதைத்திடுவோம்—பகை
வெட்டிப் புதைத்திடுவோம்!

2

தஞ்சக் கேட்டிலும் பஞ்சப் பாட்டிலும்
தவித்துக் கிடந்திருந்தோம் —பரி
தவித்து மடிந்திருந்தோம்
கெஞ்சிக் கிடந்திடல் கேட்டுப் பெற்றிடல்
கேவலம் என்று கண்டோம்—புது
மாபலம் கொண்டுவிட்டோம்!

3

சாமிகள் தர்மம் சத்தியம் மதங்கள்
சாத்திரம் பேசிடுவீர்—பல
சூத்திரம் ஓதிடுவீர்
பூமியில் நாங்கள் புழுவாய் நெளிவது
வேதங்கள் சாற்றியதோ—எமைப்
பேயர்கள் ஆக்கிடவோ!

4

சாத்விக போதனை சத்திய சோதனைச்
சாலம் தெளிந்துவிட்டோம்—எதிர்
காலம் கணித்துவிட்டோம்
ஆத்திரத் தோடெங்கள் போர்த்திறன்
காட்டிடும்
பாத்திர ஏற்றிடுவோம்—எம்
மாத்திறன் சாற்றிடுவோம்!

5

ஒட்டிய வயிறும் ஒடுங்கிய முகமும்
உலர்ந்திடு முடியுடனும்—மழை
பொழிந்திடு விழியுடனும்
கட்டிய பிணியுடை கந்தலும் குடிலுமாய்க்
காலத்தைக் கடத்துகிறோம்—நீர்
ஞாலத்தை நடத்துவதோ?

6

காட்டு மனிதர் காட்டும் நீதியில்
காறி உமிழ்ந்திடுவோம்—அவை
மீறி எழுந்திடுவோம்
நாட்டில் உழைப்பவர் வாட்டம் தவிர்த்
திடும்
நீதி அமைத்திடுவோம்—புது
வீதி சமைத்திடுவோம்.

7

யாவும் படைத்தவர் தாமும் சுகித்திட
ஏதும் இல்லையென்றால்—இந்தச்
சூதும் செல்லுமென்றால்
சாவும் தடுத்திடா வேகத் துடிப்பொடு
ஞாலத்தை எரித்திடுவோம்—மானிட
ஜாதியை அழித்திடுவோம்!

8

வானம் சிவக்கட்டும் மண்ணும் சிவக்கட்டும்
வாழ்வு சிறக்கட்டுமே — எற்றத்
தாழ்வு பறக்கட்டுமே
ஞானம் சிவக்கட்டும் ஞாலம் சிவக்கட்டும்
நாற்றம் மறக்கட்டுமே — புது
மாற்றம் பிறக்கட்டுமே!

★ ★ ★

## தேவை:

ஆடம்பர உடையல்ல
அளவுக்கதிக சொகுசல்ல
எங்கள் உழைப்புக்கு
உத்தரவாதம்......
உரிய வாழ்வு .....
இவைதான்-எங்கள்
இன்றைய தேவைகள்

## ஏன்?

உடலைப் பாதிகாட்டி
உல்லாசப் பவனிவரும்
உங்கள் தோற்றம்
அழகாகத்தான் இருக்கிறது
ஆனால் உங்கள்
இதயம்
இருண்டு கிடப்பது
ஏன்?

— இறம்பொடை பத்மநாதன்

# நேற்று — இன்று

ஆலேச்சங்கின்
ஊளை ஒலியுடன்
பொழுது புலர்ந்திட
புறப்படும் நாங்கள்
மாலைவரையும்
மாடாயுழைத்தும்
கண்டது இங்கு
கடன்பசி துன்பம்

மனைவியின் மஞ்சள்
கயிற்றினில் கிடந்து
எனது தாயின
தாயது தாலி
என்று சொன்ன
ஏதோ ஒன்றும்

அவளது பேரன்
ஐம்பதாம் ஆண்டில்
வாங்கித் தந்த
இலங்காச் சீலையும்
கஞ்சி காய்ச்சும்
கலையத்தில் ஒன்றும்
என்றோ கிடந்த
இடியப்ப உரலும்
விற்றும் நாங்கள்
விடியக் கண்டது
கடைசிப் பொடியனின்
கதையற்ற உடல் தான் !

பெரிய துரையின்
சின்னத்துரையவர்
காசு தருவதாய்
சொல்லிக் குடுத்த
மூத்த பெட்டையின்
கையிலோர் குழந்தை

ஆலேச் சங்கின்
ஊளை ஒலியுடன்
பொழுது புலர்த்திட
புறப்பட்டோம் இன்று

இளஞாயிற்றின்
சிவந்த நற்கதிர்கள்
எதிர்காலத்தின்
ஏற்றம் காட்டின.

கவ்வாத்துக் கத்தி
கண்ட கோடாலி
மண்வெட்டி
மற்றும் பொருளுடன்
பெண் ஆணென்றும்
பேதம் இன்றியே
புறப்பட்டோம்
போரிட இன்று.

பெறுவதற்கிந்த
பெரு உலகுண்டு
இழப்பதற் கெம்மிடம்
எதுவுமே இல்லை
என்பதை மனதினில்
ஏற்றியே கொண்டு
புறப்பட்டோம் நாம்
போரிட இன்று

வருக்கப் போரினில்
வாகை சூடியே
வருங்காலத்தை
வளமுறச் செய்ய
புறப்பட்டோம் நாம்
போரிட இன்று.

**சு. தியாகலிங்கம்**

★ ★ ★

## தங்கமும் வைரமும்

கடந்த செப்டெம்பர் மாதத்தில் ஈரானின் தலைநகரான டெஹ்ரானில் நடை பெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் சீனு முதன் முதலாக இம்முறைதான் கலந்துகொண்டது. இப்போட்டியில் சீன விளையாட்டு வீராகள் பல சாதனைகளை நிலைநாட்டினுர்கள். குறிப்பாக எல்லா நாட்டு வீரர்களுக்கும் முன்மாதிரியான சாதனையொன்றை நிகழ்த்தினர். பலஸ்தீன மற்றும் அரபுமக்களின இஸ்ரேலுக்கு எதிரான நீதியான போராட்டத்தை ஆதரிக்குமுகமாக, இஸ்ரேலுடன் போட்டிகளில ஈடுபட சீனவீரர்கள் மறுத்துவிட்டார்கள். இதனுல் அவர்கள் இரண்டு தங்கப்பதக்கங்களையும்கூட இழந்துள்ளனா. அவர்கள் தங்கத்தை இழந்தாலும் அவர்களின் வைரத்தை நாம் பாராட்டலாம் அல்லவா ?

## நண்பனுக்கு

பொன். பொன்ராசா

எல்லையில்லா அன்பு செய்யும்
நண்பா, உந்தன்
எண்ணத்தில் கருத்தாகி
ஏங்கியே துஞ்சுகிறேன்
தொல்லுலகின் புன்மைகளைக்
தொலைத்திடவே நீவழுத்தும்
தீட்ஷண்ய நுட்ப நெறி
வாழ்வினை யான்,
வல்லதொரு இலட்சியமாய்
எனது சிந்தை
வசமாகி ஏற்றுள்ளேன்;
வாஞ்சையுடன் நடந்திடுவேன்.
இல்லாதார் இருப்போர்கள்
இவ்வுலகில் இருந்திடாது
இருப்பதற்காய் இன்று முதல்
உழைத்திடுவேன் —இதுநிசமே.

★ ★ ★

## புரட்சி மறைக்காதே!

நிந்தாவூர் சபாத் அஹமட்

பட்டாளி விவசாயப் புரட்சியின்றி
இங்கு
புதுமை பெறமுடியாதது திண்ணம்
நீட்டோலை நெட்டுருப் போட்ட பின்னர்
நெடுஞ்சாணை மரமானால்
கூட்டாளி கூட்டுறவு
அழிந்து விடும்
கொத்தடிமை வாழ்வில்
குலவிடும் நாட்டீரே,
இழிவுநிலை வேண்டாம்
நீன்றே
புரட்சிக்கு வித்திடுவீர்!
சேரிதனில் தீயிட்டு
தீப்பிழம்புக் காடாக்கி,
ஏரிதனில் நஞ்சிட்டு
எஞ்சும் கிணறுகளில்
கொட்டி மலமள்ளிக்கொண்டு தணியாமல்,
திட்டி வசைமாரி
தீராது உடல்தன்னை
தட்டிப் பதம் பார்த்து
தலைகால் தெரியாமல்
விட்டெறியும் சேதி விரவியிருப்பதனை
மூடி மறைக்காதே!
பேடித் தனமாகும்
பீத்தற் பெருமைக்கண்
ஓடி ஒளிந்திருக்கும் ஏராளம் தீவினைகள்
தேடித் திரிவானேன் தேசத்தின்
எல்லைக்குள்?

~~~~~~

## போர் ஓயவில்லை

சி. குமாரலிங்கம்

சினக்கும் வெயில்
சினாய் பாலை வனம்
கையில் துப்பாக்கி
பாலத்தீன அகதிகளை
நினைத்தது நெஞ்சம்
UNO தீர்மானங்கள்
என் ஆனால் என்ன
விரல்கள் இயங்கியது
பட பட பட
மழை விட்டும்
தூவானம் ஓயவில்லை.

★
~~~~~~

# சனத்தொகைப் பிரச்சினைபற்றி சீனா

ஆங்கில மூலம்: சைனா றிகொன்ஸ்றக்ற்ஸ் (China Reconstructs)

—தமிழில்: அ. தேவபாலன்

[சனத்தொகைபிரச்சினை பற்றிய சீனத்தின் கருத்து என்ன? அந்நாட்டின் சனத்தொகை நிலை என்ன? அதனை அது எப்படிக் கையாள்கிறது? போன்று வாசகர்களிடம் இருந்து சைனா றிக்கொன்ஸ்றக்ற்ஸ் சஞ்சிகைக்கு வந்த பல கேள்விகளைத் தொகுத்துசீன அரசின் சம்பந்தப்பட்ட பகுதியோடு மேற்படி சஞ்சிகை நடாத்திய பேட்டி கீழே தரப்படுகின்றது.]

**1. உலக சனத்தொகைப் பிரச்சினைகள் சம்பந்தமாக சீனாவின் அடிப்படைக் கருத்து என்ன? அது இப்பிரச்சினைகளுக்கான மூலகாரணம் என்ன என்று கருதுகிறது? அவற்றிற்கு எவ்வாறு தீர்வு காண முடியும்?**

சனத்தொகையோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளான வேலை இல்லாத் திண்டாட்டம், வறுமை, பசி, பிணி, மரணவீதத்தின் அதிகரிப்பு ஆகியவை பல நாடுகளில் இருக்கின்றன. சனத்தொகை மிக அதிகமாகவும் மிக வேகமாகவும் வளருகின்ற காரணத்தால்தான் இப்பிரச்சினைகள் உருவாகின்றன என்று சிலர் கருதுகின்றனர். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இருக்கக்கூடிய பிரச்சினைகளான வறுமை, பின்னடைவு, மூலவளங்களைப் பாவிக்க முடியாமை, சூழல் அசுத்தப்படுதல், மிகவும் ஏழ்மையான குடும்ப வாழ்வு ஆகியவற்றிற்கு ''அளவுக்கதிகமான மக்கள்'' தான காரணம் என விளக்கப் தரப்படுகின்றது. அளவுக்கதிகமான மக்களுக்கு உணவளிக்க முடியாதென்றும் பெரும் சனத்தொகை சமூக முன்னேற்றத்தைப் பின்னுக்கு இழுக்கின்றது என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

இக்கருத்துக்கள் பிழையானவை என நாம் நினைக்கிறோம். அவை உண்மைகளோடு ஒட்டிப் போகவில்லை.

மக்களே உலகில் மிகவும் விலைமதிப்பற்றவர்கள் என நாம் கருதுகின்றோம். தமது தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை தமது சொந்தக் கரங்களில் மக்கள் எடுத்துக் கொள்வார்களானால் அவர்களால் அற்புதங்களைச் சாதிக்க முடியும், சமூக உற்பத்திச் சக்திகளில் இருக்கக்கூடிய சகல அம்சங்களிலும் தீர்க்கமானவன் மனிதனே. உற்பத்தி செய்பவனாகிய மனிதன் ஆழமாகவும், பரந்தும் உற்பத்தியில் தொடர்ந்து முன்னேறுவானேயானால் அவனது தேவைக்கும் அதிகமான உற்பத்தியை அவனால் உருவாக்க முடியும்.

குறிப்பிட்ட சமூக சரித்திரச் சூழ்நிலைகளின்கீழ் சனத்தொகை வளர்ச்சி பிரச்சினைகளை உருவாக்குகின்றது. சமூக உற்பத்திச் சக்திகள் தடைப்படுத்தப் படுவதாலேயே இது ஏற்படுகின்றது. இத்தகைய தடைகளை உடைத்தெறிந்து சமூக உற்பத்திச் சக்திகளை ஸ்திரமாக வளர்த்து மேலும் மேலும் சமூக செல்

---

### சிறையிலிருந்து........

மத்திய சிறை
வேலூர் — 2

அன்புத் தோழர்களுக்கு,

......... ''களனி'' கண்டோம். களனியின் கருத்துக்கள் உவகையுறச் செய்தது. மூன்றாவது உலகம் தலை நிமிர்ந்து நிற்க, தன்தளை நீங்க மேற்கொள்ளும் விடுதலை வேட்கையைத் தொடர்ந்து அது பிரதிபலித்து தனக்கே உரித்தான செம்மையான பாதையால் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்று நீண்டு வளருமென நினைக்கிறோம். களனிக்கு எங்கள் இதயங் கனிந்த நல் வாழ்த்துக்கள்.

இப்படிக்கு
தோழமையுள்ள
ராஜ்மோகன்

(இக்கடிதம் அரசியல் காரணங்களுக்காக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்ட இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி (மா—லெ). தோழர்களில் ஒருவரால் எழுதப் பட்டதாகும்.)

---

வங்களைச் சிருஷ்டிக்க மக்களால் என்றுமே முடிந்துவந்துள்ளது என்பதைச் சரித்திரம் எடுத்துக் காட்டுகின்றது. மனிதனை ஒரு எதிர்மறை அம்சமாகவும், தனியே ஒரு நுகர்வோனாகவும் மாத்திரம் கருதி சனத்தொகை வளர்ச்சிதான் பொருளாதார சமூக முன்னேற்றத்திற்கு ஒரு தடை எனக் கொள்ளுகின்ற கருத்துக்களின் பிழையைச் சுட்டிக் காட்டுவதற்கு இது ஒரு அருமையான நிரூபணமாகும்.

நூறு வருடங்களுக்கு முன்பு அதாவது உலகின் சனத்தொகை 100 கோடிக்குக் கீழே இருந்தபோதே மால்த்தஸ் என்பவன் ''அதிகமான சனத்தொகை வளர்ச்சி'' பற்றிக் கூச்சலிட்டான், உற்பத்தி சனத்தொகைக்கு ஈடுகொடுக்க முடியாதென்று அவன் சொன்னான். இன்று உலகின் சனத்தொகை நான்கு மடங்கிற்கும் மேலாக வளர்ச்சி அடைந்தபோதும் கூட மக்கள் சகல விதமான தடைகளையும் உடைத்தெறிந்து சமூக பொருளாதாரச் செல்வங்களில் மேலும் பெருத்த அபிவிருத்தியை அடைந்துள்ளனர்.

''மனித கைத்தொழில் துறையின் மிகச் சிறந்த வழிகாட்டல் முயற்சிகள்'' இருந்தாலும்கூட எத்தனை வருடங்கள் சென்றாலும் சீனா தனது உற்பத்தியை இரு மடங்காக்க முடியாது என மால்த்தஸ் கூறினான். ஆனால் உண்மை என்னவெனில் 25 வருடங்களுக்குள் நவசீனா தனது உற்பத்தியைப் பல மடங்கால் பெருக்கியுள்ளது. இந்த மல்த்தூஸியனின் கருத்து பங்கலோட்டானது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பல ஏழ்மையாகவும், பின்னடைந்ததாகவும், சனத்தொகைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியும் இருப்பதற்கான அடிப்படைக் காரணம் ஏகாதிபத்தியம், காலனித்துவம், நவகாலனித்துவம் ஆகியவை இந்நாடுகளில் தலையிட்டு அவற்றைக் கொள்ளையடித்து அவற்றின் உற்பத்திச் சக்திகளைச் சூறையாடுவதேயாகும். குறிப்பாக மேலாதிக்கத்தை நடைமுறைப்படுத்துகின்ற இரு மேல்நிலை வல்லரசுகளைப் பொறுத்தவரை இது உண்மையாகும். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் மக்கள் சுறுசுறுப்பும், புத்திக் கூர்மையுமுடையவர்கள். அவர்களின் நிலங்கள் இயற்கை மூலவளங்களால் நிறைந்திருப்பவை: அவர்கள் மனித குலத்தின் நாகரீகத்திற்காகப் பெரும் அர்ப்பணங்களைச் செலுத்தியுள்ளார்கள்: நீண்டகால காலனித்துவ, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பினதும், அடக்குமுறையினதும் விளைவான வறுமை, பின்னடைவு ஆகியவற்றுக்குள் இன்றைய காலகட்டத்தில் மட்டும்தான் அவர்கள் மூழ்கடிக்கப்பட்டுள்ளார்களா ?

வறிய நாடுகள் என்றுமே வறியவையாக இருந்துவந்ததில்லை: சனத்தொகை அதிகமாகியதால் அவர்கள் வறுமையாகி விடவில்லை: அவர்கள் ஏகாதிபத்தியத்தால் சூறையாடப்பட்டு சுரண்டப்பட்ட காரணத்தால் வறியவர்களாயுள்ளார்கள். உண்மையில் மிகவும் அதிகப்படியான அதிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் சனத்தொகை அடர்த்தி ஒப்பீட்டள

## இந்தியப் புரட்சி இலக்கியம்

தெலுங்கானாவில், அஹிம்சாவாதியின் பரமசீடரும், பாரதரத்தினமுமான பண்டித ஜவஹர்லால் நேருவும், வல்லபாய் படேலும் போலீஸ் நடவடிக்கை என்ற பேரில் மனித ரத்தம் குடிக்கக் காகங் கொண்டலைந்த ஓநாய்களாக நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரிந்தபோது, பாட்டாளிகள் தங்கள் துவக்குகளால் தங்களது உரிமைகளைப் பாதுகாக்க அணிதிரண்டு நின்றபோது, மக்கள் போராட்டத்தைத் தனது நெருப்பு வீணையில் மீட்டுவதற்காக ஒரு வங்கக் கவிஞன் கோபாவேஷத்துடன் பிரவேசித்தான். 'இந்தக் கதையை நான் பாடியாகவேண்டும்' என்று தனக்கே கட்டளை போட்டுக்கொண்டான். அவன் தெலுங்கானாக் காதைகளைப் பாடியதிலிருந்து புரட்சி இலக்கியம் மலர்ச்சி அடைந்தது என்று சொல்லலாம். அந்த ஹரிந்திரநாத் சட்டோபாத்யாயா, ''உண்மையான எழுத்தாளன் உண்மையான போர்வீரனாக இருப்பான்'' என்று குறிப்பிட்டது. மக்கள் கவிஞர்களுக்கு இலக்கணமாகிவிட்டது.

**கவிஞர் இன்குலாப் (இந்தியா)**
எழுதிய விமர்சன
மொன்றிலிருந்து

வில் குறைவானதாகும். அவர்களின் சனத்தொகை அதிகமானது என்று நாம் சொல்ல முடியுமா?

மேல்நிலை வல்லரசு நாடுகளில்கூட ஒப்பீட்டளவில் கூடிய சனத்தொகையும் பரந்த அளவிலான வறுமையும் இருப்பது தெரிந்த விடயமாகும். ஒரு மேல்நிலை வல்லரசு நாட்டில் பல இலட்சக் கணக்கானவர்கள் வேலையற்றிருப்பதோடு, பல பத்து இலட்சக் கணக்கானவர்கள் வறுமையில் வாடுகின்றனர். சோஷலிச மேலங்கி அணிகலனாகக் கொண்டுள்ள இன்னுமொரு மேல்நிலை வல்லரசு நாட்டில் வசதி படைத்த பணக்காரத் தட்டுக்கும், ஏழைத் தொழிலாள மக்களுக்குமிடையேயான இடைவெளி மேலும் மேலும் அகன்று வளர்ந்து வருகிறது. தாம் நினைத்தபடி அதிகார ஏகபோக முதலாளிகள் தொழிலாளர்களைச் சுட்டுத் தள்ளுகிறார்கள். பரந்துபட்ட தொழிலாள வெகு ஜனங்களின் வாழ்வு பாதுகாப்பற்றதாக இருக்கிறது. மேல் நிலை வல்லரசுகள் தமது நாட்டில் கைக்கொள்ளுகின்ற கொடூரமான அடக்கு முறையினதும், சுரண்டலினதும் முழுமையான விளைவே இந்நிலையாகும்.

சனத் தொகைப் பிரச்சினையின் மூல காரணங்களைத் தெளிவாகப் புரிந்து கொண்டால் சரியான தீர்வைக் கண்டுகொள்ள முடியும். ஏகாதிபத்தியம், காலனித்துவம், நல-காலனித்துவம், மேல்நிலை வல்லரசுகளின் ஆதிக்கம், போட்டி ஆகியவற்றிற்கு எதிராகப் போராடி வெல்வதும், சுதந்திரத்தைப் பெற்றெடுத்துப் பேணிப் பாதுகாப்பதும், தமது பொருளாதாரத்தையும், கலாச்சாரத்தையும் சுயசார்பில் தங்கி நின்று வளர்த்தெடுப்பதும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பிரதான விடயமாகும்.

> **இது உண்மைதானா?**
>
> "கலை இலக்கியம் ஒரு பொழுது போக்குச் சாதனம் என்றோ, ஆத்மீக மலர்ச்சியை ஏற்படுத்தும் சஞ்சீவி என்றோ கருதிய காலம் போய்விட்டது. கலை கலைக்காகவே என்ற கொள்கையும் செத்துவிட்டது."
>
> (22-6-74 ல் திருகோணமலையில் நடந்த எழுத்தாளர், கலைஞர் மகாநாடு அறிக்கையில் இருந்து)

ஒவ்வொரு நாடும் தனது சனத்தொகை நிலைக்கு ஏற்ப தனது சொந்தச் செயல் திட்டத்தை அல்லது கொள்கையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அந்நிய ஆக்கிரமிப்பையும் தலையீட்டையும் தூக்கியெறிந்து பொருளாதார, அரசியல் சுதந்திரத்தைப் பெற்று மக்களே தத்தமது நாடுகளின் எஜமானர்களாக மாறும் போது மட்டுமே இக் கொள்கையை அல்லது செயல் திட்டத்தை வெற்றி கரமாகச் செயல்படுத்த முடியும்.

சனத் தொகைப் பிரச்சினை ஒரு தீர்க்கமான பாத்திரத்தை வகிப்பதால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் சனத்தொகை சம்பந்தமான கொள்கையை முதலில் வைக்க வேண்டுமென்றும் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் சர்வரோக நிவாரணி கருத்தடையே என்றும் சிலர் கூறுகிறார்கள். இது குதிரைக்கு முன்னால் வண்டியை நிறுத்துவது போலாகும். இக் கருத்து ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை மூடி மறைப்பதற்கும் உலக மக்கள் ஏகாதிபத்தியம் காலனித்துவம், மேல்நிலை வல்லரசு ஆதிக்கம் ஆகியவற்றிற்கெதிராகப் போராடுவதிலிருந்து திசை திருப்புவதற்கும் முயல்கிறது. நாம் இதற்கு எதிராக உறுதியாக நிற்கிறோம்.

**2. பழைய சமுதாயத்திலிருந்து தொடர்ந்து வந்த சனத் தொகைப் பிரச்சினைகளுக்குச் சீன எப்படித் தீர்வு கண்டது?**

உலகிலேயே மிகவும் சனத் தொகை கூடிய நாடு சீனாவாகும். விடுதலைக்கு முன்பு ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அதிகார முதலாளித்துவம், ஆகியவற்றின் அடக்கு முறையும் சுரண்டலும் சீனாவின் சமூக உற்பத்திச் சக்திகளைச் சூறையாடியதோடு சீனாவை வறுமையானதாகவும், பின்னடைந்ததாகவும் வைத்திருந்தது. ஒப்பீட்டளவில் கூடிய சனத் தொகை வளர்ச்சி மிகவும் பாரதூரமான ஒரு விளைவாக இருந்தது. நகரங்களில் 40 லட்சம் வேலையற்ற தொழிலாளர்களும், புத்தி ஜீவிகளும் இருந்தனர். கிராமப் புறங்

களில் தமது நிலங்களை இழந்து வேலையேதும் கண்டுபிடிக்க முடியாத பல இலட்சக் கணக்கான பங்கலோட்டடைந்த விவசாயிகள் இருந்தனர்; மக்கள் வெகுஜனங்கள் குளிர், நோய், பசி, ஆகியவற்றால் வாடினார்கள். இறப்பு விகிதம் ஆகக் குறைந்தது ஆயிரத்துக்கு இருபத்தைந்து விதமாக இருந்தது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினதும், தலைவர் மாஓவினதும் தலைமையில் சீன மக்கள் ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அதிகார முதலாளித்துவம் ஆகியவற்றை உடைத்தெறிந்து தமது சொந்த நாட்டின் எஜமானர்களாக மாறினார்கள். அரசியல் பொருளாதார நிலைமைகளில் அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டதோடு சனத்தொகை நிலைமைகளில் அடிப்படை மாற்றம் நிகழ்ந்தது.

விவசாயிகள் மத்தியிலான பங்கலோட்டுத்தனம், வேலையில்லாத் திண்டாட்டம் என்பனவற்றிற்கு நிலச்சீர் திருத்தம், விவசாயக் கூட்டுமயமாக்கம் என்பன முடிவுகட்டின. ஒரு திட்டமிட்ட சோஸலிசப் பொருளாதாரம் நகரப்புற வேலையற்றோருக்கு தொழில் வசதிகளை ஏற்படுத்தியது. பழைய சமூகத்திலிருந்து விடப்பட்ட வேலையில்லாத் திண்டாட்டம் 1958-ம் ஆண்டளவில் சரித்திரமாக மாறிவிட்டது. உழைக்கும் மக்களுக்குள் வந்துகொண்டிருந்த இளம் மக்கள் ஒரு திட்டமிடப்பட்ட வகையில் வேலை வாய்ப்புக்கள் கொடுக்கப்பட்டனர். உற்பத்தியில் பங்கு கொள்ளக் கூடிய குடும்பப் பெண்மணிகள் கூட, வேலை வாய்ப்புக்கள் பெற்றனர். சீனா தனது அபரிமிதமான மனித வளத்தை ஒரு திட்டமிடப்பட்ட வகையில் பாவித்து உற்பத்தியிலும் நிர்மாணத்திலும் தனது மக்களையே அடிப்படை அம்சமாகக் கொள்கிறது.

சீனா ஒரு சுதந்திரமான சுயசார்புடைய சோசலிசப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்கிறது. இந்தச் செயல்முறையால் சீனத்தின் உற்பத்தி வளர்ச்சி தனது சனத்தொகையின் வளர்ச்சியைத் தோற்கடித்துள்ளது. நவசீனத்தின் சனத்தொகை 50 கோடியிலிருந்து 80 கோடியாக வளர்ச்சியடைந்துள்ளது. இது கிட்டத்தட்ட 60 வீதமான வளர்ச்சியாகும். தானிய உற்பத்தி 11 கோடி தொன்னிலிருந்து 25 கோடி தொன்னாக உயர்ந்துள்ளது. இது இரட்டிப்பு மடங்கிலும் பார்க்க அதிகமானதாகும். பருத்தித்துணி மற்றும் மென்ரக கைத்தொழில் உற்பத்திகள் 10, 12 மடங்குகளுக்கு மேலாக அபிவிருத்தியடைந்துள்ளன. கனரகக் கைத்

## டபிள் கேம்

இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான பலஸ்தீன, அரபு மக்களின் போராட்டத்தை முழுமனதோடு ஆதரிப்பதாகக் கூறிக்கொண்டு, அரபு நாடுகளிடம் ஆயுத விற்பனைமூலம் கொள்ளைச் சுரண்டல் நடாத்தும் சோவியத் யூனியன், மறுபக்கத்தில் 'யூதர்கள் வெளியேற்றம்' என்ற போர்வையில் இஸ்ரேலிய சியோனிஸ்ட்டுகளுக்கு மனித பலத்தையும் வழங்கி வருகிறது.

உதாரணத்துக்கு,— இராணுவ, தொழில் நுட்ப விஞ்ஞான நிபுணர்கள் உட்பட 36500 சோவியத் யூதர்களை 1973 செப்டம்பர் வரை சோவியத் அரசு அனுப்பியுள்ளது. கடைசியாக நடைபெற்ற அரபு—இஸ்ரேல் யுத்தம் வெடித்து இரண்டாவது நாளான 1973 அக்டோபர் 8-ம் திகதி கூட 500 யூதர்களை சோவியத் அரசு இஸ்ரேலுக்கு அனுப்பி வைத்தது.

சோவியத் யூனியன் இஸ்ரேலுக்கு யூதர்களை அனுப்புவதை நிறுத்த வேண்டும் என அண்மையில் பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனத் தலைவர் யாஸிர் அரபாத் கோரியுள்ளார். அண்மையில் இஸ்ரேலியன் பாதுகாவலனான அமெரிக்க மேல்நிலை வல்லரசு, இஸ்ரேலுக்கு அனுப்பும் யூதர் தொகையைக் கூட்டும்படி சோவியத் மேல்நிலை வல்லரசிடம் கோரியது. தன்னை உலக மக்கள் முன் அமெரிக்கா அம்பலமாக்கி விட்டதனால் குழப்பமடைந்த சோவியத் யூனியன் அமெரிக்காவை மிரட்டுவதற்காக அதனுடன் வர்த்தக உறவுகளைத் துண்டித்துள்ளது எனக் கூறப்படுகிறது. ★

தொழில் வளர்ச்சி இன்னும் அதிகமானதாகும்.

சீனா ஒரு அபிவிருத்தியடைந்து வரும் சோஸலிச நாடாகும். அதன் வாழ்க்கைத் தரம் ஒப்பீட்டளவில் இன்னமும் குறைவானதே. ஆனால் சீனத்தின் மக்கள் உணவு, உடைப் பிரச்சினைகள் இல்லாதிருப்பதோடு வேலை வாய்ப்புக்களும் உடையவர்களாயிருக்கிறார்கள். உற்பத்தி அபிவிருத்தியடையும் போது மக்களின் பொருளாதார, கலாச்சார வாழ்வு ஸ்திரமாக முன்னேறும். எந்த அரசாங்கமும் சீனத்தின் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியாதென்று சீனா விடுதலையடையும் காலகட்டத்தில் சிலர் சொன்னார்கள். உண்மைகள் இதை எப்பொழுதோ முறியடித்து விட்டன. எமது சொந்த அனுபவத்திலிருந்து, உற்பத்தியும் புரட்சியும் சேர்ந்து தான் உணவுப் பிரச்சனையைத் தீர்க்க முடியுமென்று நாம் அறிகின்றோம்.

3. திட்டமிடப்பட்ட சனத்தொகை வளர்ச்சி பற்றி சீனாவின் கொள்கை என்ன? அது எப்படி நடைமுறைப் படுத்தப் படுகிறது?

ஏகாதிபத்தியத்தையும் அதனுடைய வால்பிடிகளையும் தூக்கி எறிந்த பின்னர் தான் சீனாவால் தன்னுடைய பொருளாதாரத்தை ஒரு திட்டமிடப்பட்ட முறையில் அபிவிருத்தி செய்ய முடிந்தது அதன் பின்னர் தான் சனத்தொகை வளர்ச்சியைத் திட்டமிடுதல் சம்பந்தமாக அதனால் வேலை செய்ய முடிந்தது. பொருள் உற்பத்தியில் அராஜகம் பாவிப்பதில் எமக்கு நம்பிக்கையில்லை. மனித இனப் பெருக்கத்தை அராஜகமாகக் கட்டுப்படுத்துவதிலும் எமக்கு நம்பிக்கையில்லை. மனிதன் இயற்கையைக் கட்டுப் படுத்துவதோடு தனது எண்ணிக்கையையும் கட்டுப் படுத்திக் கொள்ள வேண்டும்.

சனத்தொகை வளர்ச்சியில் ஒரு திட்டமிடலை நாம் எப்படிப் பெற முடியும்? முதலில் நாம் உற்பத்தியைப் பெருக்குவதோடு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். இந்த அடிப்படையில் பிரசவம், சிறு குழந்தைகளின் நலன் ஆகியவற்றிற்கு விஷேச கவனம் கொடுத்து நகரங்களிலும் கிராமியப் பிரதேசங்களிலும் முடிந்த அளவு பரந்த அளவில் மருத்துவ சுகாதார வேலைகளை நாம் அபிவிருத்தி செய்கின்றோம். இந்த வகையில் இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கு நாம் வேலை செய்கிறோம். மறு புறத்தில் பிறப்பு விகிதத்தை திட்டமிடுவதற்காக நாம் குடும்பத் திட்டமிடலை அறிமுகம் செய்கிறோம்.

குடும்பத் திட்டமிடல் என்று நாம் சொல்லும்போது சாதாரணமாக பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்துவதை வெறுமனே கருதவில்லை. வெவ்வேறு சூழ்நிலைகளுக்கு நாம் வெவ்வேறு அணுகுமுறைகளை ஊக்குவிக்கிறோம். சனத்தொகை அடர்த்தியும் பிறப்பு விகிதமும் உயர்வாக இருக்கும் பிரதேசங்களில் நாம் காலம் தாழ்த்திய திருமணத்தையும், பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்தலையும் முன்வைக்கிறோம். அதே வேளையில் பிள்ளைகளைப் பெற விரும்புகிற, ஆனால் பிள்ளைகளைப் பெற முடியாத தம்பதிகட்கு நாம் விசேஷமான மருத்துவ கவனம் செலுத்துகின்றோம்.

சனத்தொகை அடர்த்தி குறைவாக இருக்கின்ற சிறுபான்மையின மற்றும் பிரதேசங்களில் சனத் தொகையை அதிகரிப்பதற்கும், உற்பத்தியைப் பெருக்குவதற்கும் நாம் நடவடிக்கைகள் எடுக்கிறோம். நாம் பிறப்பைக் கட்டுப்படுத்தலை வலியுறுத்தவில்லை. ஆனால் தமது குடும்பத்தின் அளவைக் கட்டுப்படுத்த விரும்புகின்ற தம்பதிகட்கு உதவியும் வழிகாட்டலும் அளிக்கிறோம். பிறப்புக் கட்டுப்படுத்தலை விரும்புகின்ற சகலர்க்கும் கருத்தடைச் சாத

### முன்னறிவிப்பு

உருவிலும்
திருவிலும்
பெரியவராக
உல்லாசக்
காரில்
பவனிவந்த
சீமான்
ஊருக்குள்
வந்து
எல்லோர்க்கும்
கும்பிடு
போடுகின்றார்
ஓட்டுப்
பிச்சை
வாங்குதற்கு

—கே. கே. தியாகமணி

னங்களும் அதனோடு தொடர்பான மருத்துவ சேவைகளும் இலவசமாக அளிக்கிறோம்.

சீனாவின் சனத்தொகை சம்பந்தப்பட்ட கொள்கை வாழ்வின் பல்வேறு அம்சங்களான தேசிய நிர்மாணம், பெண்குலத்தின் விடுதலை, தாய்மார்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோரின் பாதுகாப்பு, இளைஞர்களைச் சரியாக வளர்த்தெடுத்தல், மக்களுக்கு நல்ல சுகாதார வசதியளித்தல், நாட்டின் சுபீட்சம் ஆகியவற்றிற்கு உதவுவதாக நாம் நம்புகின்றோம். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் மக்கள் வெகுஜனங்களின் நலன் கருதியே இது செய்யப்படுகிறது.

குடும்பத் திட்டமிடலை நாம் முன்னெடுத்துச் செல்லும் போது அரசின் ஆலோசனையையும், கல்வி புகட்டலையும் மக்களின் தன்னிச்சையான விருப்போடு நாம் இணைக்கிறோம். அரசும் சகல மட்டங்களிலான சமூக ஸ்தாபனங்களும் குடும்பத்திட்டமிடலின் முக்கியத்துவத்தையும், சாதகங்களையும் பற்றிபிரசுரிப்பதாலும், விளம்பரப்படுத்துவதாலும் மக்கள் மேன்மேலும் அதை நடைமுறைப் படுத்த விரும்புகின்றனர். குடும்பத்திட்டமிடல் மக்களின் சொந்த நல்வாழ்வோடு சம்பந்தப் படுவதால் மக்களில் தங்கியிருத்தல் மூலமே அதனை வெற்றிகரமாக செயல்படுத்த முடியும்.

இத்தகைய செயல் திட்டம் அல்லது கொள்கை நல்ல ஆரம்ப விளைவுகளைக் கொடுத்துள்ளது. அடர்த்தியான சனத்தொகையையுடைய பிரதேசங்களில் சனத்தொகை வளர்ச்சியின் விகிதம் ஓரளவு வீழ்ச்சி அடைந்துள்ளது. ஷாங்காயைப் பொறுத்த வரையில் கிராமப் புறங்களையும் உள்ளிட்டு ஆயிரத்திற்கு 4·5 வீதத்தால் அது வீழ்ச்சியடைந்துள்ளது. பீக்கிங் (சுற்றியுள்ள கிராமங்களையுள்ளிட்டு) ஆயிரத்திற்கு 9·7 வீதத்தாலும், கியாங்ஸு மாகாணம் ஆயிரத்திற்கு 12 வீதத்தாலும் வீழ்ச்சியடைந்துள்ளது. வெவ்வேறு பிரதேசங்களில் முன்னேற்றம் ஏற்றத் தாழ்வாக இருப்பதோடு தொடர்ச்சியான முயற்சியும் தேவைப்படுகின்றது.

கடந்த காலங்களில் தேசிய சிறுபான்மை இனங்கள்மீது பிற்போக்குச் சக்திகள் நடாத்திய கொடூரங்களினால் அவர்களின் சனத்தொகை வருடா வருடம் குறைந்து வந்தது. சில இனங்கள் அழிவின் விழிம்பிற்கே வந்துவிட்டன சில இனங்கள் இல்லாமலே ஆக்கப்பட்டு விட்டன. சிறுபான்மை தேசிய இனப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்களின் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்காகவும், அவர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கும் விடுதலைக்குப் பின்னர், கம்யூனிஸ்ட்கட்சியும், அரசும் பல விடயங்களைக் கையாண்டன. "தாய்மார்கள் பிள்ளைகளை பெறுவதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றோம் ஆனால் அப்பிள்ளைகள் தாய்மார்களை அம்மா என்று அழைக்கக்கூடிய அளவுக்கு வாழ்ந்ததில்லை" என்றொரு பேச்சு வழக்கு உள் மொங்கோலிய சுயாட்சிப் பிரதேசத்தின் சில பிரதேசங்களில் விடுதலைக்கு முன்னர் வழங்கி வந்தது. இன்று அங்கு ஜனத்தொகைவளர்ச்சி ஆயிரத்துக்கு 21 வீதத்தால் வளர்ந்துள்ளது. சிக்கியாங் உய்குர் சுயாட்சிப் பிரதேசத்தில் அது ஆயிரத்திற்கு 30 வீதத்தால் வளர்ச்சி அடைந்துள்ளது.

★ ★ ★

புரட்சிகர கலை இலக்கிய ஏடு

நதி

கலாச்சாரக் குழு (கண்டி)யின் வெளியீடு

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:
யாழ் புத்தக நிலையம்
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான—

★ பலசரக்கு வகைகள்

★ நிறம் புகையிலை, சுருட்டு வகைகள்

★ தரமிக்க மட்பாண்ட வகைகள்

என்பனவற்றை

மலிவான விலையில் பெற்றுக் கொள்ள

ஞானம் ஸ்ரோர்ஸ்

முல்லைத்தீவு வீதி,
விசுவமடு.

---

FOR ALL KINDS OF YOUR

ELECTRICAL WORKS

CONTACT

**Dyna Motor Works**

NO. 13, VELLANTHERU, JAFFNA

உங்கள் சகலவித

மின்சார வேலைகட்கும்

டைனா மோட்டர் வேக்ஸ்

இல 13, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

கிளிநொச்சியில்

சுவைமிக்க

உணவு

சிற்றுண்டி

பாண், கேக்

குளிர்பானங்கள்

# சித்தி சைவ ஹோட்டல்

கண்டி வீதி, கிளிநொச்சி.

சுத்தமான — சுவையான

உணவு வகைகள்

சிற்றுண்டிகள்

என்பனவற்றுக்கு சிறந்த இடம்

# ராஜா ஹோட்டல்

கண்டி வீதி, பரந்தன்.

# ஒரு 'முற்போக்கு' எழுத்தாளனின் புதிய கண்டு பிடிப்புகள்!

எழுத்தாளனுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கும்; அவனது படைப்புகளுக்கும் சம்பந்தம் இருக்க முடியாது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் ஒரு எழுத்தாளனுக்கு தலைப்பிள்ளை ஆண்பிள்ளையாகப் பிறந்தால் அந்த எழுத்தாளனது படைப்புக்கள் மிகத் தரமானவையாக இருக்கும் என்று யாராவது கதையளந்தால் அதை எந்தச் சிறு பிள்ளையும் நம்ப முடியுமா?

ஒரு எழுத்தாளனது நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய ''மல்லிகை'' ஆசிரியர் டொமினிக் ஜீவா, பல சிறந்த சிருஷ்டிகளை எழுதிய எழுத்தாளர்களுக்கு தலைப்பிள்ளை ஆண்பிள்ளையாகப் பிறந்திருக்கிறதென்றும், இந்த எழுத்தாளனுக்கும் (நூல் ஆசிரியன்) தலைப்பிள்ளை ஆண்பிள்ளையாகையால் இவரது படைப்பும் தரமானதாகவே இருக்கும் என்னும் குறிப்பிட்டார். அதே போல, கொழும்பில் நடந்த பிரபல எழுத்தாளர் இளங்கீரன் அவர்களது வெள்ளிவிழாக் கூட்டத்தில் கலந்து கொண்டு டொமினிக் ஜீவா பேசுகையில், இளங்கீரன் இன்றும் தரமான படைப்புகளைப் படைப்பதற்குக் காரணம் அவர் மிக வறுமையில் வாடுவதே என்று குறிப்பிட்டார்.

டொமினிக் ஜீவாவின் வேடிக்கையான இந்தப் பேச்சை மாக்ஸிச - லெனினிஸ தத்துவத்தால் ஆயுதபாணியாக்கப் பட்ட புரட்சிகரப் படைப்பாளிகள் துளியேனும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பது ஒருபக்கமிருக்க, முற்போக்கு எண்ணம் கொண்ட யாருமே இதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதும் அப்பட்டான உண்மை. எம்மைப் பொறுத்தவரை எமது நாட்டுப் படைப்புக்களில் தரமானது என்று நாம் கருதுவது, படைக்கப் படும் படைப்புக்கள் நாட்டின் ஏகப் பெரும்பான்மையான மக்களின் நலன்களை அதாவது அவர்களின் இன்றைய துன்ப வாழ்வு, அதிலிருந்து விடுபடும் மார்க்கம் என்பவற்றைப் பிரதிபலிப்பவையையே. இத்தகைய படைப்புக்களை ஒருவர் படைப்பதற்கு படைப்பாளி அடக்கி ஒடுக்கப்படும் வர்க்கங்களைச் சேர்ந்தவராகவும், சமுதாய மாற்றத்துக்கான சரியான தத்துவத்தில் தெளிந்தவராகவும் இருக்க வேண்டும். அதை விட்டு டொமினிக் ஜீவா சொல்வதைப் போன்று தலைப்பிள்ளை ஆண்பிள்ளையாகப் பிறந்து விட்டாலோ அல்லது அவர் வறுமையில் வாடுவதாலோ இது சாத்தியமாகாது. வறுமையில் வாடும் எத்தனையோ எழுத்தாளர்கள் மக்கள் விரோத, ஆபாச இலக்கியங்களை எழுதிக் குவிப்பதை நாம் காணவில்லையா?

எனவே டொமினிக் ஜீவா 'முற்போக்கு எழுத்தாளன்' என்ற போர்வைக்குள் இருந்து கொண்டு, தான் நடாத்தும் சத்திய வேள்விக்காக செய்யும் இத்தகைய கண்டு பிடிப்புக்களையிட்டு உண்மையான முற்போக்கு எழுத்தாளர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

★ ★ ★

# தேயிலை

—க. இராசரத்தினம்

இலங்கைத் தேயிலை அதன் உயர்ந்த தரத்திற்கு உலகில் மிகவும் புகழ் பெற்றது. 600000 ஏக்கர்களைக் கொண்ட தேயிலைத் தோட்டங்களிலிருந்து வருடந்தோறும் 47 கோடி இருத்தலுக்கு மேல் தற்போது உற்பத்தி செய்யப்படுகின்றது. இத் தேயிலை ஏற்றுமதி இலங்கையின் வெளிநாட்டு வியாபார வருமானத்தில் 60 வீதத்தை வகிக்கின்றது

வரலாற்றுக் குறிப்பின்படி, தேயிலை முதன்முதலாக 1824 ல் சீனாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது ஆனால் பெருமளவிலான நடுகை 1860 சொச்சங்களில் ஆரம்பிக்கப்பட்டது. பிரதான தோட்டங்கள் தெற்கு, மத்திய மலைப்பகுதிகளில் உள்ளன கடல் மட்டத்திற்கு மேலுள்ள உயரத்தினடிப்படையில் தாழ்ந்தபயிர், மத்தியபயிர், உயர்ந்த பயிர் அதாவது 2000 அடிக்குக் கீழ், 2000 முதல் 4000 அடிவரை, 4000 அடிக்கு மேல் என இலங்கைத் தேயிலை வகைப்படுத்தப்பட்டுள்ளது. எமது தேயிலையில் ஊவாப் பிரதேச தேயிலையே அதன் தனித்துவமான சுவைக்குப் பெயர் போனது.

19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகள் இலங்கையைக் கைப்பற்றியபோது, அவர்கள் பயிரிடப்படாத காணிகள் அனைத்தையும் காலனித்துவ அரசாங்கத்தின் உடமைக்குட்பட்ட ''முடிக்குரிய காணிகள்'' எனப் பிரகடனம் செய்தனர். பிரித்தானிய முதலாளிகள் இக்காணிகளை ஏக்கருக்கு ஒரு சில ரூபாய்கள் மாத்திரமே கொடுத்து தமதாக்கிக் கொண்டதுடன், மக்களை ஈவிரக்கமின்றிக் கொடுமையாகச் சுரண்டினர். வெள்ளை முதலாளிகளால் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட தொழிலாளர்கள் எந்தவிதமான உரிமைகளும்அற்று, வாழவழியற்று அடிமைகளாக நடத்தப்படும் நிலைமை இன்றுவரை தொடருவதை நாம் கண்முன்னே காணக்கூடியதாகவுள்ளது. அத்துடன் 1948 பெப்ரவரி சுதந்திரம் கிடைத்ததின் பின்னால் உள்நாட்டு முதலாளிகளும் இதில் குறிப்பிடக்கூடியளவு பங்கு வகித்து வருவதுடன், ''தமிழ் தொழிலாளர்கள்'' என்று இனப் பரிவு காட்டுவதாக பாசாங்கு செய்யும் அரசியல், தொழிற்சங்க இயக்கங்களின் தலைவர்களும் தோட்டத் தொழிலாளர்களை கொடுமையாகச் சுரண்டி வருகின்றனர்.

இந்த நிலைமையில் அந்நிய ஏகபோகக் கம்பனிகள் சர்வதேச தேயிலைச் சந்தையில் 85 சதவீதத்தைக் கட்டுப்படுத்தியுள்ளதால் எமது நாடு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. 1958 முதல் 1971 வரை சர்வதேசச் சந்தையில் தேயிலை விலைகள் உயரவே இல்லை. 1963 ல் தேயிலையின் சராசரி ஏற்றுமதி 2.5 ரூபாவிலிருந்து 1967 ல் 2.22 ரூபாவுக்கு வீழ்ந்தது. 1967 ல் 20 சதவீதம் நாணய மதிப்பிறக்கம் செய்யப்பட்டபோதும் தேயிலை ஏற்றுமதி விலைகள் 2 52 ரூபாவுக்கே வந்தன. ஆனால் இக்கால கட்டத்தில் எமது நாடு இறக்குமதி செய்த பொருட்களின் விலை 50 சத வீதத்திற்கும் அதிகமானதாக இருந்தது.

எமது தேயிலையைக் குறைந்த விலைக்கு வாங்கி, பிறநாடுகளிடமிருந்து வாங்கும் தரமற்ற தேயிலையுடன் அதைக் கலந்து கூடிய விலைக்கு அதை விற்று கொள்ளை லாபமடிப்பதுதான் சர்வதேச ஏகபோகக் கம்பனிகளின் நடைமுறையாகும். உதாரணமாக 1971-ல் எமது தேயிலையின் சாரசரி ஏற்றுமதி விலை றாத்தலுக்கு 2.5 ரூபாவாகும், ஆனால் அதே ஆண்டு தேயிலை லண்டன் சந்தையில் றாத்தலுக்கு 5.78 ரூபா பெறுமதிக்கு விற்கப்பட்டது. அதுவும் 25—30 வீதம் வரையிலேயே எமது தரமான தேயிலை அதில் கலக்கப்பட்டது.

கடந்த சில வருடங்களாக தேயிலையின் எதிர்காலத்தை ஸ்திரப்படுத்தும் பொருட்டு எமது நாட்டு அரசாங்கம் சில

நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதாவது தேயிலை ஏல விற்பனையை நாட்டுக்குள்ளேயே நடாத்துதல், இலங்கைத் தேயிலை பற்றி உலக நாடுகளில் பிரச்சாரம், மத்திய கிழக்கு நாடுகளுக்கும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் நேரடி தேயிலை விற்பனை, என்னும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இந் நடவடிக்கைகள் குறிப்பிடக் கூடியளவு பயனளிக்கவில்லை என்றே கூறவேண்டும்.

இலங்கை மக்கள் நீண்ட காலமாகக் கோரிவருவதைக் கவனத்திலெடுத்தால் அந்நிய ஏகாதிபத்திய வாதிகளுக்கு சொந்தமான தேயிலைத் தோட்டங்கள் யாவும் தேசியமயமாக்கப்படுவது பிரச்சினைக்கான தீர்வின் முதல் அடிப்படை நடவடிக்கையாகும். அதன் மூலம்தான் எமது இயற்கை நிலைமைகளை மாற்றியமைக்கும் — அதாவது மழை வீழ்ச்சி, மண்ணரிப்புபோன்ற பிரச்சினைகளையும், அதிமுக்கிய பிரச்சினையாகிய நிலமற்ற கூலி விவசாயிகளின் நிலப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியும் அதே வேளையில் எமது பொருளாதாரத்தை பன்முகப்படுத்தி நவீன கைத்தொழில், நவீன விவசாயம் என்னும் இருமுகப் பொருளாதாரமாக அபிவிருத்தி செய்ய முடியும். தேயிலை உற்பத்திக்கு நாம் செலவிடும் மூலதனம், மனித உழைப்பு, இயற்கை வளம், அறிவு என்பனவற்றை எமது பிரதான உணவுப் பொருளான நெல்லுக்கும், ஏனைய உப உணவுப் பொருட்கள், அத்தியாவசிய பாவனைப் பொருட்கள் என்பனவற்றை உற்பத்தி செய்வதற்கும் செலவிட வேண்டும். இவற்றை நாம் செய்வதற்கு ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து எமது நாட்டை பூரணமாக விடுவிப்பதும், எமது சொந்தக் கால்களில் தங்கி நின்று தேசிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதும் அவசியமாகும்.

★ ★ ★

## வாசகர்களுக்கும் படைப்பாளிகளுக்கும்

★ தவிர்க்க முடியாத சில காரணங்களால் களனியின் கடந்த இரண்டு இதழ்கள் வெளிவர முடியாமல் போய்விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இனிமேல் அந்த மாதிரி நடைபெறாமலிருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

★ நீங்கள் பிரசுரத்திற்காக களனிக்கு அனுப்பிய படைப்புகள் இதுவரை பிரசுரிக்கப் படவில்லையென்றால் அவை பிரசுரத்திற்கு தகுதியற்றவை என்பதே காரணம். அனுப்பிய படைப்புகள் பிரசுரிக்கப்படவில்லையே என்று சோர்வடையாமல் தொடர்ந்து எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள். களனியில் பிரசுரமாவதற்கு யாரும் யாருக்கும் முதுகு சொறியத் தேவையில்லை. தரமானவைகள் நிச்சயம் பிரசுரிக்கப்படும்.

உங்களின் படைப்புகள் அளவுக்கதிகமாக நீண்டவையாக இருப்பது விரும்பத்தக்கதல்ல.

★ களனியின் தயாரிப்புச் செலவை விற்பனை வருவாய் எட்டிப் பிடிப்பதற்கான முயற்சியின் காரணமாக இந்த இதழில் இருந்து பிரதி ஒன்றின் விலை 1 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

# சாந்தனின் வகுப்புவாதமும் மல்லிகையின் சந்தர்ப்பவாதமும்

ஜனவரி மாத மல்லிகையில் 'அந்நியமான உண்மைகள்' என்ற தலைப்பில் சாந்தன் எழுதிய சிறுகதை ஒன்று பிரசுரமாகியுள்ளது. அக்கதையில் சிங்கள மக்களுக்கு எதிராக எவ்வளவு தூரம் வகுப்புத்துவேசவிஷம் கக்க முடியுமோ அவ்வளவு தூரம் கக்கப்பட்டுள்ளது. கதை இதுதான்

திருகோணமலையில் உத்தியோகம் பார்க்கும் மைத்துனனின் அழைப்புக்கிணங்க அந்த இடத்தைச் சுற்றிப்பார்ப்பதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து சிவம் என்ற வாலிபன் செல்கிறான். அங்கு அவன் விரும்பத்தகாத, காட்சிகளையெல்லாம் அதாவது, சிங்கள மக்களின் ஆதிக்கத்தை (ஆசிரியரின் கருத்தில்) காணுகின்றான். யாழ்ப்பாணத்தை போலத்தான் திருகோணமலையும் இருக்கும் என்று எண்ணிய அவனுக்கு அங்கு சென்றதும் பெரும் ஏமாற்றமாக உள்ளது. தனது சுற்றுலாவை முடித்து யாழ்ப்பாணம் திரும்புவதற்காக பஸ்சில் சீற் 'புக்' பண்ண பஸ் நிலையக் காரியத்துக்குச் சென்று அங்கிருந்த சிங்கள உத்தியோகத்தருடன் கதைக்கமுடியாமல் திரும்பி வருகிறான். அவனது மச்சான் 'புக்' பண்ணிக் கொடுக்கின்றார் அவன் பஸ்கில் யாழ்ப்பாணம் திரும்புகையில் திருகோணமலை நகரின் சுவர் ஒன்றில் 'இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களே அரபுப் பிரதேசங்களை விட்டு வெளியேறுங்கள்', என்ற வாக்கியம் எழுதப் பட்டிருப்பதைக் காணுகின்றான். அதாவது 'சிங்கள ஆக்கிரமிப் பாளர்களே, தமிழ்ப் பிரதேசங்களை விட்டு வெளியேறுங்கள்', என்று மறைமுகமாகச் சொல்வதுடன் கதை முடிகின்றது.

மேற்கூறிய கதையின் மூலம் சாந்தன் என்பவர் என்னத்தைக் கூறமுயல்கிறார்? சிங்கள மக்கள் தமிழ்ப் பிரதேசங்களை ஆக்கிரமிக்கிறார்கள். சிங்கள உத்தியோகத்தர்கள் திமிர் பிடித்தவர்கள், இவர்களை வெளியேற்றுவதற்கு அரபுப் பிரதேசங்களை ஏகாதிபத்திய வாதிகளின் உதவியுடன் கைப்பற்றி பாலஸ்தீன மக்களை அகதிகளாக்கி விட்ட இஸ்ரேலிய சியோனிஸ்ட்டுகளுக்கு எதிராக ஆயுதந் தாங்கிய போராட்டம், நடாத்துவதைப் போன்று தமிழ் மக்கள், சிங்கள மக்களுக்கு எதிராக ஆயுதப் போராட்டம், நடாத்த வேண்டும். இந்தக் கேடு கெட்ட புளித்துப் போன சங்கதியைத் தவிர வேறு என்னத்தை சாந்தன் சொல்ல முயற்சிக்கிறார்" திட்டமிட்ட முறையிலான சிங்களக் குடியேற்றம் கண்டிக்கப்பட வேண்டும். சிங்கள மக்கள் மத்தியில் வகுப்புவாதிகள் இருக்கிறார்கள் என்பதும் எற்றுக் கொள்ளப்பட வேண்டும். ஆனால் திருகோணமலையில் வாழும் சாதாரண சிங்களத் தொழிலாளர்களும், விவசாயிகளும் தான் சாந்தன் கண்களுக்கு விரோதிகளாகத் தெரிகின்றார்கள். எமது தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கும் தலைவர்கள், ஒருவர் பாக்கியின்றி எல்லோரும் வகுப்புவாதிகள், பிரிவினைவாதிகள் என்பது சாந்தனுக்குத் தெரியவில்லையா? அல்லது எல்லாம் தெரிந்தும் ஏமாற்றும் முயற்சியா?

சாந்தன் ஒரு புறம் இருக்கட்டும். மல்லிகை! பெரிய இலட்சியப் பத்திரிகையில் வந்திருக்கும் கதை எப்படி இருக்கிறது என்று பாருங்கள். உளுத்துப் போன சுவருக்கு அழகாக வெள்ளையடித்திருப்பது போல, முதல் பக்கங்களில் தேசிய ஒருமைப் பாடு பற்றி வாய்கிழியக் கத்தியிருக்கும் மல்லிகை, உள்ளே சாந்தனின் கதையைப் போட்டு பம்மாத்து விட்டுள்ளது. இதைச் சந்தர்ப்பவாதம் அல்லது போக்கிலித்தனம் என்று சொல்லாமல் வேறு என்னென்று சொல்லுவது? எமது நாட்டு வாசகர்களின் தலையில் சம்பலரைக்கும் வேலை எவ்வளவு காலத்துக்கு நடக்கப் போகிற தென்பதைத்தான் பார்ப்போமே.

★ ★ ★

# சிநேக பூர்வமான கருத்துக்களுக்கு ஒரு பதில்

(1974 மார்ச் மாத மல்லிகை இதழில் 'சில அபிப்பிராயங்களும் சிநேக பூர்வமான சில கருத்துக்களும்' என்ற தலைப்பில் அதன் ஆசிரியர் டொமினிக் ஜீவா எழுதிய கருத்துக்கள் பற்றிய 'களனி' ஆசிரியர் குழுவின் அபிப்பிராயத்தைக் கீழே தருகின்றோம். டொமினிக் ஜீவரவின் கருத்துக்கள் பற்றி இதுவரை யாரும் தட்டிக் கேட்காததால் இது அவசியமாகிறது.)

1974 மார்ச் மாத மல்லிகையில் டொமினிக் ஜீவா பின்வருமாறு கூறுகிறார். "...அதிலும் அடிக்கடி சோஷலிசம் மாக்ஸிசம் என வேத நூல்களைப்போல ஒரு விஞ்ஞான தத்துவத்தை இலக்கியததில் மேற்கோள்காட்ட முனைந்து, சமீபத்தில் செயல்பட முனைந்து நிற்கும் ஒரு 'புதுச் சிவப்புக் கூட்டத்தைப்' பற்றி நாம் மிகவும் நிதானமாகக் கணக்கிலெடுத்து வைத்திருப்பதும் அத்தியாவசியமாகிறது."

மேலும் அவர் கூறுகிறார்; 'வேண்டுமானால் அது அரசியலுடன் நின்று கொள்ளட்டும். இலக்கியத்தில் தனது ஞானத்தை நம்மவர்கள் மத்தியில் நிரூபித்துக் காட்ட வேண்டாம் என நாம் உரத்துச் சொல்ல வேண்டும் போல் தோன்றுகிறது"

டொமினிக் ஜீவா தான் இப்படி எழுதியிருக்கிறாரா என எமது முற்போக்கு எழுத்தாளர்களில் அப்பாவித்தனமான சிலர் எண்ணக் கூடும். சந்தேகமில்லை, அவரே தான் இவ்வாறு எழுதியுள்ளார். மூளைக்கோளாறு காரணமாகவோ, சுயநினைவில்லாமலோ அவர் இதை எழுதவில்லை, என்றும் போல் நல்ல நிதானத்துடனே, தேசிய இலக்கிய வளர்ச்சிக்காக அவர் நடாத்தும் புனிதமான சத்திய வேள்விக்காகவே இவ்வாறு மாக்ஸிசத்தையும், சோஷலிசத்தையும் 'புதுச் சிவப்புக்' கூட்டத்தையும் தாக்கி அவமானம் செய்திருக்கிறார். அவருடைய கூற்றுப்படி மாக்ஸிசம், அதாவது இயக்கவியல் பொருள் முதல்வாதம் இலக்கியத்திற்கு பொருத்தமற்றது? சோஷலிச சமூக அமைப்பின் மேன்மை இலக்கியத்தில் தொனிக்கவே கூடாது? பாட்டாளி வர்க்கத்தின் போராட்ட உறுதியையும், வீரத்தையும் உலகிற்கு பறைசாற்றும் சிவப்பு நிறம் அருவருப்பானது? அந்த மேன்மையான நோக்கத்திற்காக செயல்படும் இயக்கத்தினர் நிதானமாக கணக்கிலெடுக்க வேண்டிய ஆபத்தான கூட்டத்தினர்? மாக்ஸிசவாதி முற்போக்கு இலக்கியவாதி என்றெல்லாம் தன்னைக் கூறிக்கொள்ளும் டொமினிக் ஜீவா தனது சாயத்தை வெளுக்க வைப்பதற்கு இனிமேல் இடமே இல்லை.

டொமினிக் ஜீவா மிகுந்த ஆவேசத்துடன் ஆலோசனை ஒன்றையும் வெளியிட்டுள்ளார். அதாவது அந்தப் 'புதுச் சிவப்பு'க் கூட்டம் வேணுமானால் அரசியலுடன் மட்டும் நின்று கொள்ளட்டுமாம். என்ன அகங்காரம்! இந்த நாட்டின் தொழிலாளர்களும் விவசாயிகளும் அரசியலோடு மட்டும் நின்று கொள்ள வேண்டும். அரசியலுடன் பல்லும் சில்லுமாக இணைந்துள்ள இலக்கியத்தில் ஈடுபாடு கொள்ளக் கூடாது. இலக்கியம் டொமினிக் ஜீவா போன்றவர்களுக்கு மட்டுமே ஏகபோகச் சொத்து! அப்படியானால் தமிழ் இலக்கியத்தை சீதனமாக திரு. டொமினிக் ஜீவா அவர்களுக்கு தாரை வார்த்துக் கொடுத்தது யாரார் என்று அறிய விரும்புகின்றோம். உழைக்கும் மக்களையும் அவர்களது இலக்கிய கர்த்தாக்களையும் எவ்வளவு சுலபமாக ஏமாற்றி விட டொமினிக் ஜீவா முயற்சிக்கிறார்!

டொமினிக் ஜீவாவையும் அவருடைய மல்லிகையையும் பற்றி முற்போக்கு இலக்கிய கர்த்தாக்களுக்கு நாம் புதிதாக ஒன்றையும் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை. ஜீவா சார்ந்து நிற்கும் திரிபுவாத இயக்கத்தின் விஷக் காற்றைப் பரப்பும் கருவிதான் மல்லிகை. ஆதிக்க வெறி பிடித்தலையும் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் ஊது குழலாகவும், பிற

போக்கு இலக்கிய வாதிக ளின் களமாகவும் மல்லிகை திகழ்கிறது. ஜீவா சார்ந்து நிற்கும் இயக்கம் மாக்ஸிசத் தை திரிபு படுத்தியதையும், சோஷலிசத்தின் மேன்மை மையை அவதூறு செய்ததையும், செங்கொடியைக் காலின் கீழே போட்டு மிதித்துள்ள தையும் மக்கள் அறிவர். அத்தகைய ஒரு இயக்கத்தைச் சேர்ந்த வரிடமிருந்து பாட் டாளி வர்க்க இயக்கத்தை யும், அதன் தத்துவத்தையும் ஏற்றிப் போற்றும் குணும்சத் தை எதிர்பார்ப்பது தவறு தான். ஆனல் டொமினிக் ஜீவா போன்றவர்கள் தொடர்ந்தும் மக்களையும், மக்கள் படைப்பாளிகளையும் ஏமாற்றும் காலம் மலையேறி விட்டது. தொகையிலும், தரத்திலும் பெருகிவரும் மக்கள் படைப்பாளிகளின் போர்க்குணமிக்க படைப்புக் கள் ஜீவாவின் திரிபுவாத குப்பை கூளங்களை வங்காளக் கடலுக்குள் அடித்துச் செல் லும் நாள் அதிக தூரத்தி லில்லை.

"குறிப்பிட்ட எந்த ஒரு கலாச்சாரமும் ஒரு தத்து வார்த்த வடிவம் என்ற வகை யில் ஒரு குறிப்பிட்ட சமுதா யத்தின் அரசியலையும் பொரு ளாதாரத்தையும் பிரதிபலிக் கின்றது. தன் பங்கிற்கு அவற் றின்மீது ஒரு பிரமாண்டமான பாதிப்பையும் ஏற்படுத்துகின் றது, செல்வாக்கையும் செலுத்துகின்றது. பொருளா தாரமே சமுதாயத்தின் அடித் தளம், அரசியலே இந்தப் பொருளார்தாரத்தின் செறிந்த வெளிப்பாடு."

★ ★ ★


## 'புதியதோர் உலகம் செய்வோம்'

மாணவர்கள்
தொழிலாளர்கள்
இளைஞர்கள்
ஆகியோரின்
கூட்டு முயற்சி

# தேன் மழை

(முற்போக்கு இலக்கியத் திங்களிதழ்)

**தனியிதழ் 50 காசு**
**ஆண்டுச் சந்தா ரூபா 5-00**

**முகவரி :**

தேன்மழை
1/16 A, ஸ்டெர்லிங்சாலை,
சென்னை—600034
இந்தியா,

**இலங்கையில் கிடைக்குமிடம் :**

களனி
சுப்பிரமணியம் கட்டிடம்,
கண்டி வீதி,
கிளிநொச்சி.

நூறு சிந்தனை மலரட்டும்:
நாறும் கீழ்மைகள் தகரட்டும்.

# 1975

# களனி

— கலை
— இலக்கியம்
— அறிவு

### ஜனவரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | + | 5 | 12 | 19 | 26 |
| தி | + | 6 | 13 | 20 | ★ |
| செ | + | 7 | 14 | 21 | 28 |
| பு | 1 | 8 | 15 | 22 | 29 |
| வி | 2 | 9 | 16 | 23 | 30 |
| வெ | 3 | 10 | 17 | 24 | 31 |
| ச | 4 | 11 | 18 | 25 | + |

### பெப்ரவரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | + | 2 | 9 | 16 | 23 |
| தி | + | 3 | 10 | 17 | 24 |
| செ | + | 4 | 11 | 18 | ★ |
| பு | + | 5 | 12 | 19 | 26 |
| வி | + | 6 | 13 | 20 | 27 |
| வெ | + | 7 | 14 | 21 | 28 |
| ச | 1 | 8 | 15 | 22 | + |

### மார்ச்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | 30 | 2 | 9 | 16 | 23 |
| தி | 31 | 3 | 10 | 17 | 24 |
| செ | + | 4 | 11 | 18 | 25 |
| பு | + | 5 | 12 | 19 | ★ |
| வி | + | 6 | 13 | 20 | 27 |
| வெ | + | 7 | 14 | 21 | 28 |
| ச | 1 | 8 | 15 | 22 | 29 |

### ஏப்ரல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | + | 6 | 13 | 20 | 27 |
| தி | + | 7 | 14 | 21 | 28 |
| செ | 1 | 8 | 15 | 22 | 29 |
| பு | 2 | 9 | 16 | 23 | 30 |
| வி | 3 | 10 | 17 | 24 | + |
| வெ | 4 | 11 | 18 | ★ | + |
| ச | 5 | 12 | 19 | 26 | + |

### மே

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | + | 4 | 11 | 18 | 25 |
| தி | + | 5 | 12 | 19 | 26 |
| செ | + | 6 | 13 | 20 | 27 |
| பு | + | 7 | 14 | 21 | 28 |
| வி | 1 | 8 | 15 | 22 | 29 |
| வெ | 2 | 9 | 16 | 23 | 30 |
| ச | 3 | 10 | 17 | ★ | 31 |

### யூன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | 1 | 8 | 15 | 22 | 29 |
| தி | 2 | 9 | 16 | ★ | 30 |
| செ | 3 | 10 | 17 | 24 | + |
| பு | 4 | 11 | 18 | 25 | + |
| வி | 5 | 12 | 19 | 26 | + |
| வெ | 6 | 13 | 20 | 27 | + |
| ச | 7 | 14 | 21 | 28 | + |

### யூலை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | + | 6 | 13 | 20 | 27 |
| தி | + | 7 | 14 | 21 | 23 |
| செ | 1 | 8 | 15 | ★ | 29 |
| பு | 2 | 9 | 16 | 23 | 30 |
| வி | 3 | 10 | 17 | 24 | 31 |
| வெ | 4 | 11 | 18 | 25 | + |
| ச | 5 | 12 | 19 | 26 | + |

### ஓகஸ்ட்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | 31 | 3 | 10 | 17 | 24 |
| தி | + | 4 | 11 | 18 | 25 |
| செ | + | 5 | 12 | 19 | 26 |
| பு | + | 6 | 13 | 20 | 27 |
| வி | + | 7 | 14 | ★ | 28 |
| வெ | 1 | 8 | 15 | 22 | 29 |
| ச | 2 | 9 | 16 | 23 | 30 |

### செப்ரெம்பர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | + | 7 | 14 | 21 | 28 |
| தி | 1 | 8 | 15 | 22 | 29 |
| செ | 2 | 9 | 16 | 23 | 30 |
| பு | 3 | 10 | 17 | 24 | + |
| வி | 4 | 11 | 18 | 25 | + |
| வெ | 5 | 12 | ★ | 26 | + |
| ச | 6 | 13 | 20 | 27 | + |

### ஒக்ரோபர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | + | 5 | 12 | ★ | 26 |
| தி | + | 6 | 13 | 20 | 27 |
| செ | + | 7 | 14 | 21 | 28 |
| பு | 1 | 8 | 15 | 22 | 29 |
| வி | 2 | 9 | 16 | 23 | 30 |
| வெ | 3 | 10 | 17 | 24 | 31 |
| ச | 4 | 11 | 18 | 25 | + |

### நவம்பர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | 30 | 2 | 9 | 16 | 23 |
| தி | + | 3 | 10 | 17 | 24 |
| செ | + | 4 | 11 | ★ | 25 |
| பு | + | 5 | 12 | 19 | 26 |
| வி | + | 6 | 13 | 20 | 27 |
| வெ | + | 7 | 14 | 21 | 28 |
| ச | 1 | 8 | 15 | 22 | 29 |

### டிசம்பர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | + | 7 | 14 | 21 | 28 |
| தி | 1 | 8 | 15 | 22 | 29 |
| செ | 2 | 9 | 16 | 23 | 30 |
| பு | 3 | 10 | 17 | 24 | 31 |
| வி | 4 | 11 | ★ | 25 | + |
| வெ | 5 | 12 | 19 | 26 | + |
| ச | 6 | 13 | 20 | 27 | + |

## அரசாங்க — வங்கி — வர்த்தக விடுமுறைகள்

ஜனவரி — 14*x† தைப் பொங்கல்
மார்ச் — 11*x மஹாசிவராத்திரி
மார்ச் — 26 நபி பிறந்த தினம்
மார்ச் — 28*x பெரிய வெள்ளி
ஏப்ரல் — 13*x, 14*x† தமிழ் சிங்கள -புதுவருடம்
மே — 1*x† மே தினம்
மே — 22*x† குடியரசு தினம்
மே — 24, 25*x† வெசாக்
யூன் — 30x விசேஷ வங்கி விடுமுறை
செப்ரெம்பர் — 26*x† பண்டாரநாயக்கா
ஒக்ரோபர் — 7*x† றம்ழான் [தினம்
நவம்பர் — 2*x† தீபாவளி
டிசம்பர் — 14*x ஹஜ்ஜுப் பெருநாள்
டிசம்பர் — 25*x† நத்தார்
டிசம்பர் — 31x விசேஷ வங்கி விடுமுறை

★ போயா விடுமுறை * அரசாங்க விடுமுறை x வங்கி விடுமுறை † வர்த்தக விடுமுறை

"KALANI" REGD. No. 136580.


கரைச்சி வடக்கு

# பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

பரந்தன்

"மக்களுக்கு விசுவாசமாக இருத்தல் வேண்டும்"

— அமரர் பண்டாரநாயக்கா

கிளிநொச்சிப் பிரதேச விவசாயிகளுக்கும், மக்களுக்கும் தேவையான:

★ நுகர்ச்சிப் பொருட்கள்

★ விவசாய இரசாயனப் பொருட்கள்

★ உழவு யந்திர உதிரிப் பாகங்கள்

★ இரும்புச் சாமான்கள்

★ புடவை வகைகள்

ஆகியவற்றுடன்

★ எரி பொருள் விநியோக நிலையம்

★ நெவு நிலையம்

★ உழவு யந்திரம் திருத்தும் நிலையம்

ஆகியவற்றின் மூலம் சிறந்த சேவையாற்றுகிறது.

கரைச்சி வடக்கு

## பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

பரந்தன்.


இப்பத்திரிகை கிளிநொச்சி மக்கள் கலாச்சாரப் பேரவைக்காக முரசுமோட்டையைச் சேர்ந்த க. இராசரத்தினம் அவர்களால் நல்லூர் நாவலன் பதிப்பகத்தில் பதிப்பித்து வெளியிடப்பட்டது.